


வாராந்த மின்னிதழ்
உண்மையின் முகம்
கல்முனை NET e paper
kalmunainet.com
தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்
பிலவ வருடம் ஐப்பசி 27 (13.11.2021) இதழ் : 39




# ஞானசார தேரரின் செயலணி இன்று வடபகுதி விஜயம்

## வடக்கு மக்களின் இதயங்களை வெல்ல போவதாக அறிவிப்பு

## நாளை யாழ்ப்பாணத்தில் மக்கள் சந்திப்பு

(தர்மேந்திரா)

ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி பொதுமக்களின் கருத்துக்களை செவிமடுப்பதற்காக மாகாணங்கள் தோறும் கள விஜயம் மேற்கொள்கின்றது.

இதன்படி, முதலாவது கள விஜயத்தை இன்று சனிக்கிழமை வட மாகாணத்துக்கு மேற்கொள்கின்றனர். ஜனாதிபதி செயலணியின் தலைவரான ஞானசார தேரரும் செயலணி உறுப்பினர்களும் இன்று காலை முதலில் வவுனியா செல்கின்றனர்.

02

# லண்டனில் தீயில் சிக்கிய தமிழ் குடும்பம்:

## 4 இலங்கையர்கள் பலி!

இங்கிலாந்தில் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 இலங்கையர்கள் தீயில் கருகி உயிரிழந்தனர். இளம் தாய், அவரது 4, 1 வயதான பிள்ளைகள், பாட்டி ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில் தென் கிழக்கு லண்டனில் உள்ள பெக்ஸ்லிஹீத்தில் உள்ள வீடொன்றில் இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

வீடு தீப்பற்றியதும், இளம் தாய், தனது தொலைபேசி செயலிழப்பதற்கு முன்னதாக, கணவரை தொடர்பு கொண்டு தீப்பற்றியுள்ளதாக கதறியுள்ளார்.

02

# வவுனியாவில் த. தே. கூ. பட்ஜட் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிப்பு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வசமுள்ள வவுனியா வடக்கு பிரதேச சபையின் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் ச. தணிகாசலம் தலைமையில் நேற்று (19) இடம்பெற்றது.

இதன்போது 2022 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் வாசிக்கப்பட்டது.

02

# தமிழர் தரப்புடனான இரண்டாம் சுற்றுப் பேச்சு திங்கள் ஆரம்பம்

## நியூயோர்க்கில் இருந்து மீண்டும் வொஷிங்டன் செல்கிறார் சுமந்திரன்

அமெரிக்க அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர்கள் குழு அடங்கலான தமிழர் தரப்பு பிரதிநிதிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தை எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை வொசிங்டனில் ஆரம்பமாக உள்ளது.

வொஷிங்டனில் கடந்த 14 ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் தாயகத்தில் இருந்து சென்ற ஜனாதிபதி சட்டத்தரணிகளான க. கனகீஸ்வரன், எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்ட நிபுணர் நிர்மலா சந்திரஹாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

02

# உயிர்நீத்த உறவுகளின் நினைவு தினத்தை குழப்ப வேண்டாம்!

## இந்து அமைப்புகளின் கூட்டமைப்பு கண்டனம்

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது உயிர்நீத்த தமிழ் உறவுகளின் நினைவு தினத்தை வடக்கு, கிழக்கு ஆயர்கள் பேரவை இல்லங்களிலும் ஆலயங்களிலும் நவம்பர் 20ஆம் திகதி அனுஷ்டிக்கும் படி துண்டுப் பிரசுரம் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்கள்.

ஏற்கனவே, போரினால் உயிர்நீத்த எம் உறவுகளின் நினைவு தினத்தை வருடா வருடம் தமிழர்கள் அனுஷ்டித்து வருகின்றார்கள். இதில் தயவுசெய்து குழப்பத்தை ஏற்படுத்த வேண்டாம் என இந்து ஆலயங்கள் மற்றும் இந்து

02

## இரு தலை கொள்ளிகளாக ஹக்கீம், ரிசாட் தவிப்பு

# பட்ஜெட்டை ஆதரிக்க 7 எம். பிகள் உறுதி!



(நமது நிருபர்)

பட்ஜெட் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெற உள்ள நிலையில் முஸ்லிம் கட்சி தலைவர்கள் இரு தலை கொள்ளி எறும்புகளாக திண்டாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவற்றின் 07 எம். பிகள் பட்ஜெட்டை ஆதரிக்கின்ற நிலைப்பாட்டிலும் பற்றுறுதியாக உள்ளதாக கட்சி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இவர்களில்ஹாபிஸ்நஸீர், ஹரிஸ் ஆகியோரும் அடங்குகின்றனர். ஆனால், இரு கட்சிகளின் தலைவர்களும் தொடர்ந்து அரசாங்கத்துக்கு எதிரான நிலைப்பாட்டையே

02

# பல். கழகங்களுக்கு புதிய மாணவர்களை பதியும் நடவடிக்கைகள்!

பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப் புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர்சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

2020 கல்வியாண்டுக்கான வெட்டுப்புள்ளிகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்களுக்கு தகுதி பெற்ற மாணவர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒவ்வொருமாணவரும்தான் தெரிவாகியுள்ள பல்கலைக்கழகம் மற்றும் பாடநெறிகள் தொடர்பில் அறிந்துள்ளதாக அவர் கூறினார்.

# கல்முனை தெற்கு வைத். அதிகாரியின் முக்கிய அறிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

மழை காரணமாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் இன்று (20) சனிக்கிழமை முதல் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள நற்பிட்டிமுனை பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கமைய இப் பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நுளம்புகள் ஆய்வின் போது நுளம்புகளின் செறிவு அதிகமாக காணப்படுவதால் தங்களது வீட்டை சுற்றிலும் அதனை சூழவுள்ள இடங்களையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு பொதுமக்களை

02

# இந்திய மக்களிடம் மன்னிப்பு கோரினார் நரேந்திர மோடி

## வேளாண் சட்டங்கள் வாபஸ்



சர்ச்சைக்குரிய மூன்று வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக நேற்று அறிவித்த பிரதமர் நரேந்திர மோடி விவசாயிகளின் ஒரு பிரிவினருக்கு இந்த சட்டத்தின் நன்மைகளை புரிய வைக்க முடியாமல் சென்றதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக தெரிவித்தார்.

விவசாய உற்பத்தி வணிகம் மற்றும் வியாபாரம், விவசாயிகள் விலை உறுதி ஒப்பந்தம் மற்றும் சேவைகள், அத்தியாவசிய பொருட்கள் சட்டம் ஆகிய மூன்று சட்டங்கள்

02

# முஸ்லிம்களை பாதுகாக்கும் கடமையில் நிச்சயம் ஈடுபடுவேன்

## ஜனாதிபதி செயலணி உறுப்பினர் கலில் ரகுமான்

ஒரே நாடு, ஒரே சட்டம் என்கிற செயலணியை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஸ நியமித்து உள்ள நிலையில் அதை ஞானசார தேரரின் செயலணியாக சித்திரிப்பது தவறு,

இச்செயலணியில் அங்கம் வகித்து முஸ்லிம்களின் பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்துவோம் என்று இச்செயலணி உறுப்பினர்களில் ஒருவரும், ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான கலில் ரகுமான் தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து தெரிவித்தவை வருமாறு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைகுழுக்களைநியமிப்பதும், நியமனங்களை வழங்குவதும் வழக்கம். அந்த வகையில்தான் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டு அதற்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

ஞானசார தேரரையும் ஜனாதிபதியே நியமித்து உள்ளார். எங்களையும் ஜனாதிபதியே நியமித்து உள்ளார். எனவே இது ஜனாதிபதியின் செயலணியே ஒழிய ஞானசார தேரரின் செயலணி அல்ல. இதை ஞானசார தேரர் தலைமையிலான செயலணியாக சித்திரிப்பது மிக தவறு.

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை ஐக்கிய நாடுகள் சபை அடங்கலாக சர்வ சமூகத்தின் மேலான கவனத்துக்கு எழுத்துமூல ஆவணமாக கொண்டு செல்வோம். செயலணியில் அங்கம் வகிப்பதன் மூலம் இதில் முஸ்லிம் மக்களின் குரலாக ஒலித்து நன்மைகளை உறுதிப்படுத்தி தீமைகள் நேராமல் பார்ப்போம்.

பிரபாகரன், கருணா, பிள்ளையான் ஆகியோருடன் முஸ்லிம் தரப்பு இணங்கி செயற்பட முடிந்தது, முடிகின்றது என்றால் ஏன் ஞானசார தேரருடன் இணங்கி செயற்பட முடியாது? என்று நான் முஸ்லிம் சமூகத்திடம் நான் கேட்கின்றேன்.

முஸ்லிம்களுக்கு எதிராக புத்தகம் எழுதியவர் சம்பிக்க ரணவக்க. அவரையும், அவர் சார்ந்த ஐக்கிய மக்கள் சக்தியையும் முஸ்லிம் பிரதான கட்சிகள் ஆதரித்து வருகின்றன. பெரும்பான்மையான முஸ்லிம் மக்களும் ஆதரிக்கின்றனர்.

ஆனால் சம்பிக்க ரணவக்கவை முஸ்லிம் தரப்பு ஏற்று கொண்டு இருக்கின்றது. நாம் சஹ்ரான் மாதிரி செயற்பட முடியாது. பெரும்பான்மை மக்களுடன் இணைந்து செயற்படுவதே எமக்கு பாதுகாப்பு.

நாம் ஆணை குழுவின் அமர்வுகளில் பங்கெடுப்போம். சுற்றுலாக்களில் பங்கெடுக்க மாட்டோம். வடக்குக்கான விஜயத்தில் நான் பங்கேற்கவில்லை. ஏனைய முஸ்லிம் உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை என்றே நினைக்கின்றேன்.

## தமிழர் தரப்புடனான...

இதேபோல, அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட புலம்பெயர் தேசங்களில் இருந்து உலக தமிழர் பேரவையின் 06 பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அமெரிக்க அரசாங்கத்தின் தரப்பில் அங்குள்ள அரசாங்க திணைக்களங்களின் இரண்டாம் நிலை அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

ஆயினும், பேச்சுவார்த்தையின் விபரங்கள் எவையும் இன்னமும் வெளிவரவில்லை. இருப்பினும், தமிழர் தரப்பு பிரதிநிதிகளுடனான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை வொஷிங்டனில் எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

இதில், அமெரிக்க அரசாங்க தரப்பில் தீர்மானம் எடுக்க வல்ல முதனிலை அதிகாரிகள் பங்கேற்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

முதல் கட்ட பேச்சு வார்த்தை முடிந்த பிற்பாடு, நியூயோர்க் சென்ற சுமந்திரன் எம். பி, இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்காக வோஷிங்டனுக்கு மீண்டும் புறப்பட்டு செல்கிறார்.

## இந்திய மக்களிடம்...

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கிய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத் தொடரின்போது நிறைவேற்றப்பட்டன.

அந்த ஆண்டு செப்டம்பர் 27ம் திகதி இந்த மூன்று சட்டங்களுக்கும் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல் வழங்கினார்.

இந்த மூன்று சட்டங்கள் காரணமாக விவசாயிகளின் வருமானம் பல மடங்கு உயரும் என்பது மத்திய அரசின் வாதமாக இருந்தது.

ஆனால் , விவசாய சங்கத்தினர் தங்களது விளைபொருட்களில் பெரும் வணிக நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பிப்பார்கள் என்று குற்றம் சாட்டினார்கள்.

பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லி எல்லைகளில் கடந்த ஆண்டு நவம்பர் 26ம் திகதி முதல் போராட்டத்தை தொடங்கினார்கள்.

தற்போது இந்த போராட்டம் ஒரு வருடத்தை நிறைவு செய்ய உள்ள நிலையில் தான் நேற்று காலை 9 மணிக்கு பிரதமர் நரேந்திர மோடி தொலைக்காட்சியில் தோன்றி நாட்டு மக்களிடையே உரையாற்றினார். அப்போது சர்ச்சைக்குரிய 3 வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக அவர் அறிவித்தார்.

விவசாயிகளின் நலன் காக்க இந்த சட்டங்கள் கொண்டுவரப்பட்டதாகவும், விவசாயிகளின் துன்பங்கள் என்ன என்பது தனக்கு தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேநேரம்,இந்த சட்டத்தின் நலன்கள் பற்றி விவசாயிகளின் ஒரு பிரிவினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நாங்கள் தோல்வி அடைந்துவிட்டோம். இதற்காக நாட்டு மக்களிடம் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். இந்த மூன்று சட்டங்களும் வாபஸ் பெறப்படும் என்று நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இருந்தபோதிலும், பாராளுமன்றத்தில் இந்த சட்டம் வாபஸ் பெறப்பட்ட பின்பே, தங்கள் போராட்டத்தை கைவிடுவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

## லண்டனில் தீயில்...

தீயணைப்பு படையினர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டபோதும் வீட்டிலிருந்த 4 பேரை காப்பாற்ற முடியவில்லை. உயிரிழந்த இளம் தாயின் சகோதரன், மேல் மாடியிலிருந்து குதித்து உயிர் தப்பித்தார். அவர் கால்கள் உடைந்துள்ளன.

தனது மனைவி, 4, 1 வயதுடைய பிள்ளைகள், மாமியாரை பறிகொடுத்த கணவன், தீயில் கருகிய வீட்டின் முன்பாக கதறியழுது, சரிந்து விழுந்த காட்சிகளை பிரித்தானிய ஊடகங்கள் ஒளிபரப்பின.

சுமார் 3 மாதங்களின் முன்னர்தான் 425,000 பவுண்டுகளிற்கு அந்த வீட்டை அவர்கள் கொள்வனவு செய்துள்ளனர்.

நேற்று இரவு 8.30 மணியளவில், யோகன் பணியிலிருந்த போது, அவரது மனைவியிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. மிகவும் பீதியடைந்த குரலில் அவர், “நெருப்பு” “நெருப்பு” என கத்தியுள்ளார். அத்துடன் தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது.

அவரது மனைவியின் தாயார் இன்று இலங்கைக்கு திரும்பவிருந்தார். இதற்காக மாடியில், அவரது பயண பொதிகளை கட்டிக் கொண்டிருந்த போது, இந்த தீ விபத்து நேர்ந்துள்ளது.

எனினும், தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பது இன்னும் உறுதியாகவில்லை.

குழந்தைகள் இருவரும் படுக்கையிலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## கல்முனை தெற்கு...

கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

குறித்த விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டமானது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ. சுகுணனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ. ஆர். எம். அஸ்மி தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மழை காலங்களில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும்.

எனவே நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த தங்கள் வீடுகள் வளவுகளை சுத்தம் செய்வதோடு, தங்கள் வீடுகளில் காணப்படும் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான பொருட்கள் அனைத்தையும் சேகரித்து தங்கள் பிரிவுகளில் வருகை தரும் பிரதேச சபை உழவு இயந்திரத்தில் ஒப்படைக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## ஞானசார தேரரின் செயலணி...

இவர்கள், மதியம் 2.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை வவுனியாவில் பொது மக்களை சந்திக்க உத்தேசித்து உள்ளனர்.

இதே போல, பொகஸ்வெவ பிரதேசத்தில் மறுநாள் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை மக்கள் சந்திப்புக்கான கூட்டத்தை நடத்த தீர்மானித்து உள்ளனர்.

பின்னர், யாழ். மாவட்டத்துக்கு சென்று மறுநாள் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை வலம்புரி மண்டபத்தில் மக்கள் சந்திப்புக்கான கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்து உள்ளனர்.

அதன் பிற்பாடு மறுநாள் காலை யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு முல்லைத்தீவை வந்தடைந்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் காலை 11.00 மணிக்கு கூட்டம் நடத்த நேரம் ஒதுக்கி உள்ளனர். பின்னர் கிளிநொச்சிக்கு சென்று மதியம் 2.30 மணிக்கு கூட்டம் நடத்த திட்டமிட்டு உள்ளனர்.

நாம் இது தொடர்பாக செயலணி உறுப்பினர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது, வட மாகாண மக்களுக்கு ஏராளமான பல பிரச்சினைகள் உள்ளன என்பது உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூகத்தின் கருத்தும், கணிப்பும் ஆகும், வட மாகாண மக்களின் இதயங்களை நாம் வென்றெடுக்க விரும்புகின்றோம்.

தேசிய நல்லிணக்கத்துக்கான உறவு பாலமாக எமது விஜயம் அமையும், ஆர்வலர்கள் அவர்களின் யோசனைகளை அங்கு எமக்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்க முடியும், இதே நேரத்தில் ஏனைய மாகாண மக்களை நாம் ஒதுக்கி இருப்பதாக யாரும் பொருள் கொள்ள கூடாது என்றார்கள்.

## பட்ஜெட்டை ஆதரிக்க...

காட்டுகின்றனர். தலைமைகளின் முடிவை மீறி செயற்படுபவர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று இத்தலைமைகள் எச்சரித்து உள்ள போதிலும், 07 எம். பிகளும் அவற்றை பொருட்படுத்தி இருப்பதாக தெரியவில்லை.

இதேநேரம் இந்த எம்பிக்கள் பட்ஜெட்டை ஆதரித்து வாக்களித்து கட்சியின் நிலைப்பாடாக கருத முடியாது என்று ரிஷாட் பதியுதீன், ஹக்கீம் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில், முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீடம் ஆராயலாம் என்று தெரிய வருகின்றது.

இதனால், தலைவர்கள் பட்ஜெட்டுக்கு எதிராக வாக்களிக்கின்ற போதிலும் 07 எம்.பிகளும் ஆதரவாக வாக்களிப்பார்கள் என்கிற நிலைமை உருவாகியிருக்கிறது.

பட்ஜெட்டை தோற்கடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் பகிரத முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. ஆனால், எதிர்தரப்பை சேர்ந்த தலைவர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் ஆகியோரின் எம். பிகள் அரசாங்கத்துக்கு முட்டு கொடுக்கின்றனர்.

எதிர் காலத்தில் 07 எம். பிகளும் கூட்டு சேர்ந்து தனி அணியாக செயற்பட கூடும் என்கிற அச்சமும் இரு தலைவர்களுக்கும் இருப்பதாக தெரிய வந்திருக்கின்றது.

## வவுனியாவில் த. தே. கூ.....

இந்நிலையில், மக்கள் சார்பான வேலைத்திட்டத்திற்கு போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லை என பல்வேறு உறுப்பினர்களாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அநேக உறுப்பினர்களின் எதிர்ப்பினால் வரவு செலவு திட்டம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டது.

வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 8 உறுப்பினர்களில் 7 பேர் வாக்களித்ததுடன் ஒருவர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

அதற்கு எதிராக 15 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலை கூட்டணி, பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முண்னணி, சுயேட்சைக் குழு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 15 பேரே அதற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு உறுப்பினர் நடுநிலைமை வகித்ததுடன், ஜேவிபி, பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளை சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த ஒருவர் ஆகிய மூவர் சபைக்கு சமூகமளித்திருக்கவில்லை.

இதனால், 2022 ஆம் ஆண்டிற்கான சபையின் வரவு - செலவுத் திட்டம் பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்தது

## உயிர்நீத்த உறவுகளின்...

அமைப்புக்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் சி. வரதநிரோஷன் வெள்ளிக்கிழமை (19) ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது ;

ஆயர்களின் இந்த அழைப்பினை இந்து ஆலயங்கள் மற்றும் இந்து அமைப்புக்களின் கூட்டமைப்பு மிக வன்மையாகக் கண்டிக்கின்றது. ஏனென்றால், வெள்ளிக்கிழமை (19.11.2021) சர்வாலய தீபமும் சனிக்கிழமை (20.11.2021) விஷ்ணுவாலய தீபமுமாகும்.

இந்துக்களின் பண்டிகைகளுடன் அரசியலை செய்ய வேண்டாம். 20ஆம் திகதி சனிக்கிழமை விஷ்ணு ஆலயங்களிலே தீபம் ஏற்றினால் பாதுகாப்பு படையினரால் அச்சுறுத்தல்கள் ஏற்படவும் வாய்ப்புக்கள் அதிகம்.

ஆகவே, இந்துப் பெருமக்களே, இந்து ஆலயங்களின் நிர்வாகிகளே சிந்தித்து செயற்படுங்கள். ஆயர்கள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்திலே திருகோணமலை, யாழ்ப்பாணம்,மன்னார்,மட்டக்களப்பு போன்ற இடங்களைச் சேர்ந்த ஆயர்களே கையொப்பமிட்டுள்ளனர்.

ஆனால், அவர்களின் தலைமைப் பீடமான கொழும்பிலுள்ள ஆயர் ஆல்பர்ட் மல்கம் ரஞ்சித் தற்போதைய இலங்கை ஜனாதிபதி, பிரதமர்களுடன் சந்தித்து தங்களுக்குத் தேவையானவற்றை பெற்று ஒற்றுமையாக இருப்பார்கள்.

ஆகவே, ஆயர்கள் இந்த அறிக்கையை வாபஸ் பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம் என அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் பக்கத் தொடர்ச்சி...

## கதை பல்லக்கில் அண்ணன்...

இன்று செல்வாக்கை பறிகொடுத்து நிற்கிறது அரசு.

நிதி முகாமைத்துவம் தவறிப்போனதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு, நாடு என்ற, அடிப்படையோடு அணுகுவதுதான்ஆரோக்கியம்.வெற்றிமமதையில் சகலவற்றையும் பல்லக்கில் வைத்து பார்த்தவர்களுக்கு, கால்நடை கொஞ்சம் புரிய வைத்திருக்கும்.

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு, கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு

உரிய கருவி, உற்ற காலம், ஆற்றும் வகை, ஆற்றிடும் பணி ஆகியவற்றை ஆய்ந்தறிந்த செயல்படுபவனே சிறந்த அமைச்சன்.

# கதை பல்லக்கில் அண்ணன் கால்நடை

உரத்து கத்தினாலும் எல்லாமே மறைந்துவிடும் என்பது பலரது நினைப்பு. அதன் மூலம், பொய்யும் மெய்யாகலாம் என்பது சிலரது சில்லறை சிந்தனை.

வரவு - செலவுத்திட்ட விவாதங்களை பார்க்கின்றபோது இந்த நிலை தான் தெரிகிறது.

கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் பாராளுமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது. நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரவு - செலவுத் திட்டத்தில் என்ன அடங்கியிருக்கிறது என்பதுதான் இன்றைய வாதப்பிரதிவாதங்கள்.

பாரிய நிதி நெருக்கடிக்குள் சிக்கி இருக்கும் இந்த அரசாங்கம், இயலாத நிலையிலும் ஒரு வரவு-செலவுத் திட்டத்தை கஷ்டப்பட்டு சமர்ப்பித்திருக்கிறது. இந்த நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வீதியில் இறங்கி இருக்கிறது. மக்களைத் திரட்டி அரசுக்கு எதிரான போராட்டங்களை நாடு முழுவதும் முன்னெடுத்து இருக்கிறது.

நாட்டில் எதற்கெடுத்தாலும் போளின். எரிபொருளுக்கு தட்டுப்பாடு; சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு; சீமெந்துக்கு தட்டுப்பாடு - அப்படி இருந்தாலும், யானை விலை குதிரை விலைக்கு ஒப்பாக இருக்கிறது. சாப்பாட்டு பார்சல் ஒன்றின் விலையை கேட்டால், பெருமூச்சுவிடும் அவலம். உண்மையில், எழுந்தமானமாக விலைகள் அதிகரிக்கப்படுகின்றன. இதில் கேட்க பார்க்க யாரும் இல்லை; மனிதாபிமானம் கூட பேசவில்லை.

நாட்டை யார் நிர்வகிக்கிறார்கள். வர்த்தக பெரும் புள்ளிகளா? அல்லது அரசாங்கமா? கையறு நிலையில் இன்று நாடு திண்டாடுகிறது.

மக்களின் பிரச்சினைகளை மனம் திறந்து முறையிடும் இடம் பாராளுமன்றம். எதிரணி உறுப்பினர்கள் வாய் திறந்தால், ஆளும் தரப்பில் கொதித்து எழுகிறார்கள். சத்தம் போட்டு குரலை உயர்த்தி பேசுவதும், பிரச்சினையை அரசியலாக்கி அடக்குவதும், மக்களை மறந்த அரசியல் என்பதை, ஆளும் தரப்பு எம்பிக்களும் அமைச்சர்களும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

பிரச்சினைகளை பிரச்சினையாக கையாளுவதுதான் தீர்வுக்கு வழி வகுக்கும். அன்றாட வாழ்வுக்கு அல்லல்படும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் வார்த்தைகளையாவது சொல்லுவதற்கு கற்றுக் கொள்ளுங்கள்.

எல்லாமே செய்வதாகத் தான் ஆட்சிக்கு வந்தார்கள். 65 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மிகுந்த நம்பிக்கையோடு வாக்களித்தார்கள். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி பீடம் ஏறி, இரண்டு ஆண்டுகள் பூர்த்தி அடைந்த நிலையில், அரசின் மீதான நம்பிக்கை கேள்விக்குறி ஆகியுள்ளது. மிகக் குறுகிய காலத்தில், செல்வாக்கிழந்த வரலாற்றை இந்த அரசு உருவாக்கி இருக்கிறது.

இன்றைய நெருக்கடிக்கு, நல்லாட்சி காலத்தில் பெற்ற கடனை அடைப்பதானாலேயே, இந்த சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என அரசாங்க தரப்பு கூறுகிறது.

இல்லவே இல்லை. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பட்ட கடனை செலுத்துவதனாலேயே நாடு மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதென, எதிரணி குற்றம் சாட்டுகிறது. காரணத்தின் அடிப்படையை கூறுபோட்டு பார்க்காததன் பிரதிபலிப்புகள் இவை.

இலங்கையிலிருந்து உருவ வேண்டிய எல்லாவற்றையும் சீனாஉருவிவிட்டது.இனியும்உருவுவதற்குஎதுவும்இல்லை. கொழும்பு துறைமுக நகரம், ஹம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட முக்கிய அபிவிருத்தி திட்டங்கள் பலவற்றின், வருவாய்கள் சீனாவுக்கே போகிறது. இவையெல்லாம் தடுக்க கூடிய வல்லமை அரசுக்கு இருப்பதாக தெரியவில்லை.

சீனா இலங்கையின் நட்பு நாடு - சந்தேகமே இல்லை. இலங்கையின்அபிவிருத்திக்குஉதவுகிறோம்என்றபோர்வையில், நடக்கும் கபடத்தனம் மிகவும் ஆபத்தானது.

"எல்லாமே எங்களுக்கு தெரியும்" என்ற அரசின் தாரக மந்திரம், பௌத்த தேசியவாதத்தை முதன்மைப்படுத்தியதோடு மட்டுப்படுத்தப்பட்டதனால்,

தொடர்ச்சி 02ஆம் பக்கம்...



2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை அண்மையில் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாராளுமன்றில் சமர்ப்பித்தார். இந்த வரவு - செலவு திட்டமானது மக்களுக்கு மட்டுமல்லாது முழு நாட்டிற்கும் பயனற்று போன ஒரு பாதீடு என பல்வேறு தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது.

இருந்த போதிலும், தொடர் போராட்டத்திற்கு மத்தியில் 27 வருட காலமாக பாரிய பிரச்சினையாக இருந்த அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டிற்கு ஒரு சாதகமான விளைவு கிடைக்கப்பெற்றுள்ளது.

இருந்த போதிலும், சாதாரண மக்களின் நலன்கள், அபிவிருத்தி திட்டங்கள், அவர்களின் பொருளாதார அபிவிருத்திகள், சுயதொழில் வாய்ப்புகள் மற்றும் அடிப்படை வசதிகள் என்பன கண்டுகொள்ளப்படாமல் இருப்பது பாரிய கேள்விகளை எழுப்பி இருக்கின்றது.

# நலத்திட்டங்கள் இல்லாமல் மக்கள் நம்பிக்கை இழந்த பட்ஜெட்!

அதேவேளை, அரச பணியாளர்களின் சம்பள உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் விலை கட்டுப்பாடு நிர்ணயம் தொடர்பிலான விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் இருப்பது மக்களை மேலும் சிந்திக்க வைக்கின்றது. மக்கள் எதிர்பார்த்து இருந்த எந்த ஒரு நலத்திட்டங்களும் இந்த பாதீட்டில் உள்வாங்கப்படாமையால் அரசாங்கத்தின் மீது இருந்த கொஞ்ச நஞ்ச செல்வாக்கும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது.

## பெருந்தோட்டங்களில் லயன்களுக்கு பதிலாக தனி வீடுகள்: ரூ.500 மில். ஒதுக்கீட்டுக்கு பாராட்டு

கொரோனாவின் கோரப்பிடியில், இந்த இக்கட்டான கால சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆதரவை இந்த பட்ஜெட் பெற்றாலும், பொது மக்களின் பூரண ஆதரவை பெற முடியாமல் போயுள்ளது என்பதே நிதர்சனம்.

அத்தியாவசிய பொருட்களின் எல்லையில்லா விலையுயர்வு, பெட்ரோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் பற்றாக்குறை, சமையல் எரிவாயுவின் விலையுயர்வு, பண்டங்களை பதுக்குதல் போன்ற நாடகங்கள் நாட்டில் அரங்கேறிய வண்ணமே உள்ளது. இதற்கான சாதகமான தீர்வினையும் இந்த பட்ஜெட் பெற்றுத்தர மறுத்துள்ளது. இது நாட்டு மக்களுக்கு பாரியதொரு அவலமாகவே உள்ளது.

மேலும் இந்த பட்ஜெட்டில் மத அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பௌத்த மதத்திற்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு இடம் பெற்றிருக்கும் அதேவேளை, ஏனைய மத அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை; அது பற்றி பேசப்படவும் இல்லை. இதற்கு தேவைப்படும் மேலதிக நிதியினை பெற்று தருமாறு கோரிக்கை பொதுமக்கள் கேட்கின்றனர்.

நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்பட்ட நிலையில், அதற்கான மாற்றுவழியின்றி மக்கள் பொருளாதார முடக்க நிலையில் வாழ்ந்து வருவதும், நாட்டின் தன்னிறைவு விவசாய செய்கையின் உரத்தட்டுப்பாடு, மானிய நிராகரிப்பு போன்ற பல இன்னல்களுக்கு விவசாயிகள் முகங்கொடுத்து வருகின்றனர். முன்னர் என்றுமே இல்லாத வகையில் எங்கு பார்த்தாலும் போராட்டங்கள், கிளர்ச்சிகள், எதிர்ப்பு பேரணிகள் என மக்கள் ஆயிரக்கணக்கான கேள்விகளின் பிடியில் இதன் மூலம் தங்களது உரிமைகளை வென்றெடுக்க முயற்சிக்கின்றனர்.

ஒரு பக்கம் அரசு; மறுபக்கம் இயற்கை. கடந்த நாட்களில் அசாதாரண காலநிலை மாற்றத்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், தங்களது உடைமைகளையும் இழந்திருந்தனர்.

இதற்கான நிவாரணங்கள் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் பெற்றுத்தர பின்வாங்கி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு கொடுப்பதற்கான வரவு - செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆயினும், இது எந்த அளவு சாத்தியப்படும் என்பது தொடர்பில் ஐயப்பாடு நிலவுகின்றது. இவை முழுமையாக மக்களுக்கு கிடைக்கப்பெறுமா என்ற அச்சம் நிலவுவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

அதேபோல,காணாமல்போனவர்களின்நிலையை கண்டறிய முடியாமல் அதனை பொறுப்பேற்கவும் முடியாமல் பல ஆணைக்குழுக்களை அமைத்து பல வருடங்களாக விசாரணைகள் நடத்தியும் முழுமையான ஒரு முடிவுக்கு வர முடியாத காரணதினால், அரசு பொறுப்பேற்றுக் கொள்கின்றது எனலாம்.

பெருந்தோட்ட பிரதேசங்களில்,தொடர்குடியிருப்புக்கு பதிலாக (லயன்) புதிய தனி வீடுகள் அமைப்பதற்காக இந்த வரவு- செலவு திட்டத்தில் 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஒருபுறத்தில் பெருந்தோட்ட மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருந்தாலும், அவர்களின் மனதில் ஏதோ ஒரு கேள்வி நிலை ஏற்பட்டு உள்ளது.

## பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டாலும் மக்கள் அங்கீகாரம் ?..?..?

காரணம் இதற்கு முன்னதாகவும் எத்தனையோ திட்டங்கள் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருந்த போதும், அவை யாவும் முழுமையாக மட்டுமல்லாது ஓரளவேனும் நிறைவேற்றப்படவில்லை. அதற்கு மலையக அரசியல் தலைவர்களும் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக இந்திய அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தனிவீட்டு திட்டத்தினை குறிப்பிடலாம்.

மேலும், பல அரசியல் தலைவர்கள் இந்த வரவு - செலவு திட்டத்தினை புறக்கணித்த வண்ணமே உள்ளனர். வரவு -செலவு திட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு முற்றாக புறக்கணிக்கப் பட்டிருக்கிறது. இதனை முழுமையாக ஒப்பீட்டு நோக்கும் போது, இந்த வரவு - செலவு திட்டமானது மக்களின் நலனில் எந்தளவும் பயனடையாது. சீர்குலைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப அரசாங்கம் என்ன செய்துள்ளது என்பதுதான் கேள்வியாக இருக்கிறது.

ஜயகுமார் ஷான்
மாத்தளை



சிரேஷ்ட தமிழ் அரசியல் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அவர்கள் 'கல்முனை நெற்-மின் இதழுக்கு' வழங்கிய பிரத்தியேக செவ்வியின் கடந்த வாரத் தொடர்ச்சி...

# 13 ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அமையாது!

**மனோ கணேசன் எம்பி கல்முனை நெற்றுக்கு பரபரப்புப் பேட்டி**

**கே: அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவு செயலாளர், தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு செயல்பட வேண்டுமென கோரிக்கை விடுத்தார். அப்படி தமிழ்க் கட்சிகள் ஒன்றுபடுவ தற்கான சாத்தியம் இருக்கின்றதா?**

இந்தியாவின் வெளியுறவு செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஷிரிங்லா தமிழ்க் கட்சியொன்றுபட்டு கோரிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டுமென்று பொதுவாக சம்பிரதா யபூர்வமாக கருத்தை முன்வைத்தார். உண்மைதான். ஆனால், அவர் அப்படி சொல்லியிருக்கின்றார் என்ற காரணத்தினாலே, இத் தமிழ்க் கட்சிகளெல்லாம் ஒன்றுபடாமல் இருக்கின்றன என்ற எண்ணப்பாட்டிற்கு அவசர அவசரமாக வந்துவிடாதீர்கள். அப்படியல்ல, அவர் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் கூட இங்கு தமிழ்க் கட்சிகள் பிரதானமாக ஒன்றுபட்டுத்தான் இருக்கின்றன. வடக்கு, கிழக்கிலே தமிழரசுக் கட்சி டெலோ, புளோட் ஆகிய மூன்று கட்சிகளும் இணைந்து கூட்டாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் செயற்படுகின்றன.

அதேபோல, தென்னிலங்கையிலே, மலையகத்திலே, ஜனநாயக முன்னனி, தொழிலாளர் தேசிய முன்னனி, மலையக மக்கள் முன்னனி ஆகிய மூன்று கட்சி களும் ஒன்று சேர்ந்து தமிழ் முற்போக்கு கூட்டணியை உருவாக்கியுள்ளன. எங்களது தமிழ் முற்போக்கு கூட் டணியானது, இப்பொழுது பதிவுருவாக்கம் செய்யப் பட்டு அப்பதிவுருவாக்கம் இன்னும் சில வாரங்களில் கிடைக்கப்பெறும். அந்தளவிற்கு முன்னேறியுள்ளோம்.

ஷிரிங்லாவோ அவரது பிரதமர் நரேந்திர மோடியோ இதில் அறிவுரை கூறலாம். ஆனால், முடிவெடுத்து செயற்பட வேண்டியது நாங்கள் தானே. நாங்கள் செயற்பட்டு இருக்கின்றோம்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை நாங்கள் ஒரு தெளிவான செயற்பாட்டில் இருக்கின்றோம் பாருங்கள். வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையிலே அங்கிருக் கக்கூடிய தடம் வேறுவிதமானது. ஆகவே, தமிழ் தேசிய களம் அது. அங்கு தமிழ் தேசிய களத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுகின்றது. தென்னிலங்கைத் தளம், தமிழ் தேசியத் தளம் அல்ல. சிங்கள மக்களுடன் சேர்ந்து கலந்து சிறுபான்மையாக வாழும் களம். ஆகவே, இங்கு சிங்கள மக்களை அனுசரித்து செல்ல வேண்டும். அத்தகைய தளத்தைத்தான் தமிழ் முற்போக்கு கூட்டணி கையாள்கின்றது. எப்படிக் கையாள வேண்டும் என்ற தெளிவு, அறிவு எங்களுக்கிருக்கின்றது.

எனவே, நாங்கள் இதையெல்லாம் சமாளித்துக் கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். அதைப் புரிந்து கொள்ளுங்கள். நிச்சயமாக சாத் தியமிருக்கின்றது தானே. இப்பொழுது எங்கள் கூட் டுக்குள் இல்லாத கட்சிகள் கூட, எதிர்காலத்தில் கூட் டுக்குள் வரலாம். ஆளும் கட்சி, ஆளும் தரப்பிலுள்ள கட்சி கள் இங்கே வரமுடியாது. அதற்கு வாய்ப்பில்லை ராஜா... ஆளும் தரப்பை விட்டு வெளியே வந்தால் வரலாம். அவ்வளவுதான். அங்கே இருந்து கொண்டு இங்கே இருக்கமுடியாது. பொதுவான விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தைக்கு வேண்டுமானால் வரலாம். அவ்வ ளவுதான்.

**கே: அரசியலமைப்பிற்கான 13ஆம் திருத்தம் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையுமா? இந்தியா இந்த நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருக் கின்றது. இது பற்றி?**

அரசியலமைப்புக்கான 13ம்திருத்தம், இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையாது என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும். ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்த 13ம் திருத்தம் தான் அமையும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா தெரிவிப்பதாக நீங்கள் கூறுகின்றீர்கள். இது பற்றியான கருத்துக் கேட்கின்றீர்கள். இதைப்பற்றி நீங்கள் என்னிடம் கேட்கக் கூடாது. இந்தியாவிடம் கேட்கவேண்டும். கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

எனது நிலைப்பாட்டை, எமது கட்சியின் நிலைப் பாட்டைத்தான் சொன்னேன். எங்களைப் பொறுத்தவரை 13ம் திருத்தம் ஒரு ஆரம்பப் புள்ளிதான். எல்லாவற்றிற்கும் இல்லை. இல்லை என்று சொல்லி விட்டு, ஒன்றுமில்லாமல் போவதற்கு வழிகாட்ட முடியாது.

13ம் திருத்தம் முழுமையான தீர்வல்ல என்பதை நாங்கள் வலியுறுத்திக் கொள்ளும் அதேவேளை, 13ம் திருத்தத்தை முழுமையாக அமுலாக்கப் பங்களித்த இந்தியா, இலங்கை ஆகிய பிரதான இரண்டு அரசாங் கங்களையும் நாங்கள் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம். 13ம் திருத்தத்தை முழுமையாக அமுலாக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம். அதே போல் 1987ம் வருடம் இந்திய –இலங்கை ஒப்பந்தத் தின் போது, இலங்கை அரசாங்கத்தால் இந்தியா விற்கு வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும்படி இலங்கை அரசாங்கத்திற்கு நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம். அதேபோல அதே வருடத்திலே ஆயுதப் போராட்டத்தை நிறுத்திவிட்டு ஆயுதங்களை தரையில் வைத்த, தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய பல்வேறு இயக்கங்கள் இன்றைய ஜனநாயக அரசியல் கட்சிகள், அவர்களுக்கு இலங்கை அரசாங் கத்தாலும் இந்திய அரசாங்கத்தாலும் வழங்கப்பட்ட உறுதி மொழிகளையும் முழுமையாக அமுலாக்கும் படி இரண்டு அரசாங்கங்களையும் நாங்கள் கோருகின்றோம்.

2009 ஆம் ஆண்டு போர் முடிவையடுத்து, இலங்கைக்கு வந்த ஐ.நா. பொதுச் செயலாளர் நாயகம் பாங்கிமூனுக்கு இலங்கையின் அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வழங்கிய உறுதியுரை, அது கொண்டிருந்த கூட்டறிக்கைக்கு ஏற்ப நாகரிகமாக பொறுப்புடன் நடந்து கொள்ளும்படி இலங்கை அரசாங்கத்திடம் கோருகிறோம்.

**துணிவு இல்லாத மலையக கட்சிதான் அரசுக்குள்**

இது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் 13ம் திருத்தம் தொடர்பான தெளிவான நிலைப்பாடு என்று நான் நம்புகிறேன்.

**கே: அரசாங்க வர்த்தமானி அறிவிப்பின்படி, இதுவரை தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபாய் சம்பளம் முழுமையாக கிடைக்கவில்லை. இ. தொ. காவும் ஒத்துக்கொள்கிறது. அடுத்தகட்ட நடவ டிக்கை என்ன?**

இ. தொ. காவை தொடர்புபடுத்தி இதுக்கெல்லாம் பதில் சொல்ல நான் தயாராக இல்லை. பொதுவாக கூறு கிறேன். எழுதிக்கொள்ளுங்கள். தமிழ் முற்போக்குக் கூட்டணியை பொறுத்த வகையிலே, மலையகத் தோட்டத் தொழிலாளர்கள், மலையக தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு, தோட்டக் காணிகள் பிரித்து வழங்கப்பட்டு, அவர்கள் சிறு தோட்ட உரிமையாளர்களாக மாற வேண்டும். கிராமவாசிகளாக மாற வேண்டும். தோட்டக்காணிகள் சொந்தமாகவோ அல்லது நீண்டகால குத்தகைக்கோ வழங்கப்பட வேண்டும்.

அவற்றை வழங்கும் தோட்ட காணி தொழில்துறை கூட்டுறவு சங்கங்கள் தொழிலாளர்களை அடிப்படை யாகக் கொண்டு செயற்பட வேண்டும் என்பதாக இருக்கின்றது. இதுதான் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கக் கூடிய நிரந்தர தீர்வாக இருக்கும் என்று நாங்கள் திடமாக நம்புகின்றோம். ஆனால், அது வரும் வரைக்கும் இடைக்கால தீர்வுகள் வரலாம்.

சம்பளம் தினசரி சம்பளம் கிடைக்கலாம். 1000 ஆக இருக்கலாம் 2000 ஆக இருக்கலாம். அது கூட்டு ஒப்பந்தம் மூலமாக கிடை க்கலாம். இங்கே நீங்கள் பேரிட்ட கட்சிக்கு இது சம்பந்த மாக தெளிவில்லை. புரிதல் இல்லை. ஆளுமை இல்லை. தாங்கள் வாழும் அரசாங்கத்துக் குள் சண்டை போட தைரியம் இல்லை. துணிச்சல் இல்லை.

**இந்த அரசிடம் ஆலோசனையும் இல்லை; கேட்கும் பக்குவமும் இல்லை**

எங்களது ஆட்சிக் காலத்திலே யேநல்லாட்சிகாலத்திலேயேதோட் டத் தொழிலாளர்களுக்கு அது பொற் காலமாக அமையும் விதத்திலே காரிய காரியங்களை நாம் செய்திருக்கின்றோம். அரசின் பங்காளிகளாக இருந்த அந்தக் கட்சி செய்யாத பல விஷயங்களை நான்கு வருடங்களில் நாங்களே செய்திருக்கின்றோம். தோட்டத் தொழிலாளி குடும்பங் களுக்கு 7 பேர்ச் காணி என்ற உரிமையை அமைச்ச ரவை பத்திரத்தின் மூலமே நாங்கள் பெற்றுக் கொடுத் திருக்கின்றோம். மாடி வீடு கட்ட போனவர்களை, மாடி வீடு கட்ட வேண்டாம். தோட்டங்களில் இடம் இருக்கு என்று சொல்லி, தனித்தனி வீடுகள் கட்டினோம்.

அத்தனி வீடு குடியிருப்புகள் எல்லாம் மலையக தமிழ் கிராமங்களாக அறிவித்தோம் அதிகார சபை உருவாக்கி னோம். மலையகத்திலே இதே மாதிரி நுவரெலியா மாவட்டத்திலே புதிதாக 6 பிரதேச சபைகளை உருவாக் கினோம். உருவாக்கி காட்டினோம். கல்முனைகாரருக்கு நன்றாக தெரியும். கல்முனையிலே பிரதேச செயலக, பிரதேச சபை, நகரசபை என்று சொல்லி தமிழர்களும் முஸ்லிம்களும் உங்களுக்குள்ளேயும் அரசாங்கத்துடனும் மோதிக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மலையகத்திலே ஒரே தரத்தில், 6 பிரதேச சபைகளை உருவாக்கி, சாதித் துக் காட்டி இருக்கின்றோம். அது எப்படி செய்தோ மென்றால், அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவும் பிரதமர் ரனில் விக்ரமசிங்கமும் தங்கத்தட்டில் வைத்து எங்களுக்கு தரவில்லை.

நாங்கள் சண்டையிட்டோம்.. மோதினோம்... அந்தக் கூட்டத்திலிருந்து எழுந்து சென்ற பொழுது, நான் அமர்ந் திருந்த ஆசனத்தில் எட்டி உதைத்துவிட்டு சென்றேன். அந்த துணிச்சல் எங்களுக்கு இருக்கின்றது. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். கடந்த கால கட்டத் தில், பிரதேச சபைகளாலே தெரிவு செய்யப்படக் கூடிய உறுப்பினர்களுக்கு, மலையகத் தமிழர்கள், தோட்டத் தொழிலாளர் வாக்களிக்கலாம். ஆனால், பிரதேச சபைகள் தோட்டத்துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என்ற தடுப்பு சட்டமொன்று இருந்தது. அது நாங்கள் அமைச்சரவை அனுமதி யைப்பெற்று, பாராளுமன்றம்கொண் டுவந்து மாற்றினோம் என பல காரியங்களை செய்திருக்கின்றோம். தாங்கள் ஆரம்பித்து வைத்த பணிக ளையாவது தொடர்ந்து செய்வோம் என்று ஜனாதிபதி, பிரதமரிடம் தட்டிக்கே ட்டு சண்டையிட்டு செய்வதற்கான ஆளுமை, துணிச்சல் தைரியம் எதுவுமே இல்லாத கட்சியாக தான் இப்பொழுது மலையகத்தின் சார்பாக அரசாங்கத்துக்கு உள்ளே இருக்கும் கட்சியாக தன்னை ஒரு கட்சி காட்டிக் கொண்டிருக்கின்றது.

**கே: இந்த அரசுக்கு சரியான பொருளாதார நிபுணர் களின் ஆலோசனை கிடைக்கவில்லையா? அல்லது நிபுனர்கள் வழங்கிய ஆலோசனையை இவர்கள் கேட்கவில்லையா?**

எவ்வளவுதான் சிறந்த ஆலோசகர்கள் இருந்தலும் கூட கேட்பவர்களுக்கு அந்த ஆலோசனையைப் புரிந்து கொள்ள அறிவு இருக்க வேண்டுமல்லவா? புத்திமிருக்க வேண்டுமல்லவா? இந்த புத்தியும் அறிவும் இல்லாத அரசாங்கம் தான் ராஜபக்ஷ அரசாங்கம்.

ஆகவே, ஆலோசகர்களை குறை சொல்லி பிரயோ சனம் கிடையாது. ஆளவந்தவர்களைத்தான் குறை சொல்ல வேண்டும். மறுபுறத்திலே இவர்கள் ஆளவரும் பொழுதே, ஆலோசகர்களை அழைத்து வந்தார்களே. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகுவதற்கு முன்னா டியே, ஒரு கும்பலை நாடு முழுவதும் அழைத் துச் சென்று வாக்குத் தேடினார். வியற்மகே... என்ற அந்த கும்பல் அழைக்கப்பட்டது. வியற்மகே.. என்றால் அறிவுசார் பயணம் என்று அர்த்தம். நிறைய ஆலோச கர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். நாங்களும் கூட நம்பினோம். ஒரு சாடையாக நம்பினோம். பரவாயில்லை.

இவர் ஆட்சிக்குத்தானே வந்துள்ளார். இவர் ஆளத்தானே போகிறார். இவருடன் வந்த ஆலோசகர்கள் ஆலோசனை வழங்கு வார்கள். அறிவுரைகள் வழங்குவார்கள். அதையொட்டி இந்த ஜனாதிபதி செயற் படுவார் என்று எதிர்பார்த்தோம். கடைசியில் பார்த்தால் எல்லோருமே பரமார்த்த குரு சீடர்களைப் போல் செயற்படுகிறார்கள்.

மறுபுறத்தில், அலிபாபாவும் 41 திருடர் களும் போல் செயற்படுகிறார்கள். இவர் களிடம் ஆலோசனையும் இல்லை, தப்பித் தவறி இருந்துவிட்டாலும், கேட்கும் பக்குவமும் ஆளுபவர்களுக்கில்லை. இதுதான் யதார்த்த உண்மை.

ஆகவே, இந்த அரசாங்கம் என்றால், ஆளவந் தோர்களும் சரி, ஆலோசனை கொடுப்பவர்களும் சரி, தோல்வியடைந்து விட்டார்கள். இவர்கள் விரட் டியடிக்கப்பட வேண்டியவர்கள். அவ்வளவுதான் சொல்ல விரும்புகின்றேன்.

நேர்காணல்: குணராசா

**பிரதமர் மஹிந்தவின் விசுவாசம், தனிப்பட்ட நட்புக்களின் பலத்தில் சமூகத்துக்கு தேவையானதை சாதித்து வருவதாக களுத்துறை மாவட்ட தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.**

**'கல்முனைநெற்' மின் இதழுக்கு அவர் வழங்கிய நேர்காணல்.**



# பிரதமருடனான நட்பினால் சாதித்து வருகிறேன்

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் உங்களுக்கு வழங்கப்பட்டதன் பின்புலம் என்ன? எதற்காக, இப்பதவி உங்களுக்கு தரப்பட்டது?**

**பதில்:** நான், மஹிந்தவின் விசுவாசி. அவரது நீண்ட கால நட்பினால் இந்த விசுவாசம் வளர்ந்துவிட்டது. அரசியலில் எவரிடமும் விசுவாசத்தை, குறிப்பா க முஸ்லிம் தலைவர்களிடம் அண்மைக் காலமாக இந்த விசுவாசம் இல்லாமற்போனது பெரும் கவலை அளிக்கிறது. அன்பின் அடையாளத்துக்காக இப் பதவியை எனக்குத் தந்தார்.

**அன்பின் அடையாளமாகவே எனக்கு எம்பி பதவி வழங்கப்பட்டது**

**கே: கட்சி தாவிச் சென்ற, அல்லது அணி மாறிய முஸ்லிம் தலைவர்கள் பற்றி, நியாயமான காரணங்கள் இருந்ததாக நீங்கள் கருதவில்லையா?**

**பதில்:** இருக்கலாம். அந்த நியாயங்களைச் சரிப்படுத்த துரோகம் செய்யக் கூடாதில்லையா? பிடிக்கவில்லை என்றால், பதவிகளை துறந்து விட்டுத்தானே செல்ல வேண்டும். அமைச்சு, சொகுசு, பதவிகளை அனுபவிப்பது கடைசியில் கழுத்தறுத்துவிட்டு கட்சி தாவுவது இதைத்தான் துரோகம் என்கிறோம்.

**8 முஸ்லிம் பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரம் உயர்த்தியுள்ளேன்**

**கே: இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம்களுக்கென்று தனிக்கட்சிகள் அவசியம் தானா?**

**பதில்:** அதைப்பற்றி நான், கருத்துச் சொல்ல விரும்பவில்லை. எனக்கும் இக்கட்சிகளில் இணையுமாறு எவரும் அழைக்கவுமில்லை.

**கே: எம்பியான பின்னர், எதைச் சாதித்திருக்கிறீர்கள்?**

**பதில்:** களுத்துறை மாவட்டத்தில் எட்டு முஸ்லிம் பாடசாலைகளை தேசிய பாடசாலையாக தரமுயர்த்தி உள்ளேன். கடந்த இருபது வருடங்களில், எந்த முஸ்லிம் தலைவர்களாலும் முடியாது போன காரியமிது. அரசியல் பலத்தால் அல்ல, மஹிந்தவுக்கு என்னிடமுள்ள அன்பால் அடைந்த சாதனை இது.

**கே: பிரதமர், உங்களுடன் இவ்வளவு அன்பாக இருக்கிறார் என்கிறீர்கள், இந்த அன்பை வைத்து, கொரோனா ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டதையும் நிறுத்தியிருக்கலாமே?**

**பதில்:** இந்த விடயம் பற்றி பல தடவைகள் பிரதமரிடம் பேசினேன். பயன் உடனடியாகக் கிடைக்காதிருந்தது அப்போது. இதனால், அரசியல் உறவை விலக்கி, தனிப்பட்ட உறவை மாத்திரம் பிரதமருடன் பேணிக்கொள்ள முடிவு செய்தேன்.

அந்த நேரம், இதுபற்றிக் கேள்வியுற்ற எனது நண்பர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்.பி. என்னைச் சந்தித்து பல ஆலோசனைகள் கூறினார்.

சமூகத்துக்கு எதையாவது செய்வதற்கு நீங்கள், அரசாங்கத்தில் இருங்கள் என்றார். பிரதமரின், உறவில் இன்னும் பலதை உங்களால் சாதிக்க கிடைத்தால் நன்மைதானே என்றார்.

**கே: பத்து வருடங்கள் பூரணமான எம்பிக்களுக்குத்தான் ஓய்வூதியம் என்று பட்ஜட்டில் அறிவிக்கப்பட்டுள்ளதே.. இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:** மக்களுக்கு சேவைகள் செய்ய வந்தோருக்கு எதற்கு சலுகைகளும், ஓய்வூதியமும். அரசியல் களத்தில் ஓயாது உழைத்துக்கொண்டிருப்பதே எமது பணி.

சொந்தச் சொத்துக்களை மக்களுக்கு செலவு செய்வதுதான் மக்கள் தொண்டு.

**கே: உங்கள் பிரதேசத்தில் நடந்த அசம்பாவிதங்களை வைத்துத்தான், முஸ்லிம்களின் எதிரிகளாக ராஜபக்ஷக்கள் காட்டப்பட்டுள்ளனர். இருந்தபோதும், பேருவளை நகர சபை, நீங்கள் நிறுத்திய சுயேச்சை அணியின் வசம் வந்திருக்கிறதே?**

**பதில்:** இங்கு நடந்த சில அசம்பாவிதங்களுக்கு அரசியல் சாயம் பூசப்பட்டது. ஆட்சியிலிருந்து இவர்களை அகற்ற வேண்டிய தேவை சர்வதேச சக்திகளுக்கும் இருந்திருக்கலாம். இந்த சக்திகள்தான், இந்த அசம்பாவிதங்களை அரசியல் சந்தையில் மூலதனமாக்கின. இதை, எனது மக்களுக்கு நன்கு விளங்க வைத்தேன்; வெற்றியும் கிட்டியது.

**பொதுஜன பெரமுன கட்சியின் பயணம் வெற்றியளிக்கும்**

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பற்றி சுருக்கமாக, சொல்ல என்ன இருக்கிறது?**

**பதில்:** உண்மையில், நாட்டுப்பற்றுக்கு அர்ப்பணிக்கும் கட்சி இது. வேற்றுமை வாதங்களை ஒழித்து, தேசப்பற்றில் சமூகங்களை இணைக்கும் இந்தக் கட்சியின் பயணம் நிச்சயம் வெற்றியளிக்கும்.

**பதவிகளை அனுபவிப்பது கடைசியில் கழுத்தறுத்துவிட்டு கட்சி தாவுவது இதைத்தான் துரோகம் என்கிறோம்.**

பேட்டி கண்டவர்: நிப்ராஸ்








# காராமுனை சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த முடியுமா?

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சிங்கள மக்களின் விகிதாசாரங்களை அதிகரித்து அம்மாவட்டத்தில் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திலும் மாகாண சபையிலும் சிங்கள பிரதிநிதிகளை அதிகரிப்பதற்கு திட்டங்கள் தீட்டப்படுவது கையும் மெய்யுமாக ஊர்ஜிதமாகி இருக்கிறது.

இந்த தூரநோக்குடனான சதித் திட்டங்களுக்கு பல சிங்கள அதிகாரிகளும், பின்புலமாக இருக்கின்ற அரசியல்வாதிகளும் இணைந்து செயல்படுவது வெளிப்படையாகத் தெரிவதாக, தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்பிக்கள் தெரிவிக்கின்றனர்.

வெளி மாவட்டங்களிலிருந்து சிங்கள மக்களை கொண்டுவந்து, தமிழர்கள் பூர்வீகமாக வாழும் பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கு இவர்கள் திட்டமிடுகிறார்கள் என மக்கள் பிரதிநிதிகளும் பொது மக்களும் குற்றம் சாட்டுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப் பக்கமாக அமைந்துள்ள, வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள, காரமுனை எனப்படும் மாங்கேணி கிராமத்தின், தெற்கு பிரதேசத்தில் 178 சிங்கள குடும்பங்களை குடியேற்றுவதற்கான செயற்திட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அந்த பகுதியில் குடியிருந்த சிங்கள மக்கள் 1985 ஆம் ஆண்டு யுத்த சூழல் காரணமாக இடம் பெயர்ந்ததாக காரணம் காட்டுகின்றனர். உண்மையில், அந்த 178 குடும்பங்களும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. திம்புலாகல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். திம்புலாகல தேரரால் முன்னெடுக்கப்பட்டு வந்த இந்த திட்டம், 2015 இல் கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த ஒஸ்ரின் பெனாண்டோவினால் முழுமையாக நிராகரிக்கப்பட்டு இருந்தது. ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை என்பதே, ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் நிராகரிப்புக்கு காரணமாகும்.

இந்த நிலையில், அவர்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருந்த போதே மட்டக்களப்பில் இந்த பிரச்சனை பூதாகரமானது. அப்போது, காணி ஆணையாளர் அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, அந்த வெளிமாவட்டத்தைச் சேர்ந்த 178 பேருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

இந்த 178 குடும்பங்களும் குடியேறி 1985 வெளியேறியிருந்தால், 1981ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் அவர்களுடைய பெயர் இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அதனை கொடுப்பது நியாயமானது. சிங்கள மக்கள் இருந்த இடத்தில் அதை கொடுப்பதற்கு தடையில்லை. ஆனால், பிழையான முறையில் குடியேற்றம் நடைபெறுவதாகவே மக்கள் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றனர். இவர்கள் இருந்ததற்கான எந்த ஒரு ஆதாரமும் வாகரை பிரதேச செயலகத்திலும் சரி, மாவட்ட செயலகத்திலும் சரி எவ்வித ஆதாரங்களும் இல்லாமலேயே இருக்கிறது.





## வனபரிபாலனசபை இக்காடழிப்புக்கு பாராமுகமாக இருப்பதேன்?

இலங்கையில் காணிச் சட்டம் ஒன்றுதான் இருக்கிறது. அதில் சிங்கள மக்களுக்கு அனுமதிப் பத்திரம் சிங்களத்தில் இருக்கின்றது. அவ்வாறான ஒரு அனுமதிப் பத்திரம் இதுவரை மாவட்ட செயலகத்தில் வழங்கப்படவில்லை. அவை புதிதாக தயாரிக்கப்பட்டுள்ளன. இதில் கையொப்பமிட்ட காணி உத்தியோகத்தர், மட்டக்களப்பில் கடமையாற்றியவருமில்லை. இந்த மாவட்டத்தைச் சேர்ந்தவருமில்லை. அவர் அம்பாறையைச் சேர்ந்த உத்தியோகத்தர். அவர் எவ்வாறு இங்கு கடமை மேற்கொள்ளமுடியும்?

ஆகவே, இது முழுக்க முழுக்க பொய்யான சட்ட விரோதமான நடவடிக்கை. இந்த காணி அனுமதிப் பத்திரம் யார் தயாரித்தாரோ அவருக்கு கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டுமென தமிழ் கூட்டமைப்பு எம்பிக்கள் பகிரங்கமாக கேட்கின்றனர்.

எல்லாம் போலியானவை. திட்டமிட்ட வகையில் குடியேற்ற போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு சில தமிழ் அதிகாரிகள் துணைபோயிருக்கின்றனர். இந்த பொய்யான முறையில் சிங்கள மக்களை குடியேற்றி, மட்டக்களப்பில் சிங்கள மக்கள் குடிசன தொகையை அதிகரிப்பதற்கும் அரசியல் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கும் இந்த திட்டமிட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அதேவேளை, அம்பாறை, பொத்துவில் கனகர் கிராமத்தில் நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்து, யுத்தத்தால் வெளியேறிய சுமார் 300 குடும்பங்களை இன்றுவரை குடியேற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வாறு அந்த மக்கள் கஷ்ட நிலையில் இருந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது, சிங்கள மக்களுக்கு திட்டமிட்டு பொய்யான ஆவணங்களை தயாரித்து காணியிருக்கும் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அத்துமீறிய திட்டமிட்ட சிங்கள மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தின் கெவிளியா மடுவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணியை ஊர்காவல்படையினரைவைத்து, பயிர்ச்செய்கைஎன்ற போர்வையில் குடியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அவ்வாறு மாதவனை, மயிலத்தமடு மேச்சல்தரையும் சிங்கள மக்களை குடியேற்ற திட்டமிடப்பட்டுள்ளதாக தெரியவந்திருக்கிறது.

புணாணையில், பௌத்த மத்திய நிலையம் அமைப்பதற்கென திம்புலாகல தேரர் 50 ஏக்கர் காணி வாகரை பிரதேச செயலாளரிடம் கோரியிருக்கிறார்.

சிறிய துண்டு நிலத்துக்காக, சட்ட நடவடிக்கைகளை எடுக்கும் வன பரிபாலன திணைக்களம்,

## இத்திட்டத்திற்கு சில தமிழ் அதிகாரிகளும் துணை!

காரமுனையில் இந்த 178 குடும்பங்களுக்கும் காணி வழங்க, சிங்கள அதிகாரி நடவடிக்கை எடுக்கும் போது பாராமுகமாக இருப்பது ஏன்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியுள்ளது.

இன விகிதாசாரத்தை மாற்றியமைக்க முனையும் திட்டமிட்ட இத்தகைய சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக, எந்த வகையிலும் உயிரை கொடுத்தாவது போராடத் தயாராக இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது.

காராமுனை குடியேற்ற விவகாரத்தைதடுக்கும்வகையில், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இருப்பதாகதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் கல்முனைநெற்றுக்கு தெரிவித்தார்.




இக்குடியேற்றத் திட்டத்திற்கெதிராக தமிழ், முஸ்லிம் மக்கள் போராட்டம்

(வ. சக்திவேல்)

# 31ஆவது அமரத்துவ நினைவு நாள்

## 20. 11. 2021 (சனிக்கிழமை)



அமரர் **அருமைக்குட்டி கணேசமூர்த்தி**

(ஓய்வு நிலை சுகாதார கல்வி அதிகாரி - HEO)

எல்லோர்க்கும் இனியனாய் இருந்த எங்கள்
அன்புத் தலைமகன் அமரர் அருமைக்குட்டி கணேசமூர்த்தி
அவர்கள் அந்திமச் சுவாசம் விட்ட
31ஆவது அமரத்துவ நினைவு நாள் இன்று
20. 11. 2021 சனிக்கிழமை நடைபெறும். இந்நாளில்
அன்னாருக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும்
மதிய போசனத்திலும் தங்களையும் கலந்து கொள்ள
தயவுடன் அழைக்கின்றோம்.

உதயம்
12. 10. 1941

அஸ்தமனம்
20. 10. 2021

பணிலம்
110/2 பழைய மின்சார நிலைய வீதி,
நற்பிட்டிமுனை 03. கல்முனை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்


# டெங்கா? கொரோனாவா?

# தடுமாறும் நோயாளர்கள்

'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதுபோல்' இன்று இலங்கை மக்கள் என்ன சாபக்கேட்டுக்குள்ளானரோ தெரியவில்லை. கொரோணா வந்து முடியாத நிலையில் டெங்கின் ஆதிக்கம் எங்கும் பரவுகின்றது. இதுவும் ஒரு ஆட்கொல்லி நோய்.

இந்த அடைமழை காலத்தில் நிச்சயம் பாரிய பாதிப்பினை இந்த நோய்ப் பரவல் தூண்டும் என்பது எம்மை விழிப்புடன் இருக்கச் செய்ய வேண்டும்.

இலங்கையில் 2021 இல் மாத்திரம் இன்றுவரை 24,000 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சமீபத்திய புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சில ஆண்டுகளுக்கு முன்பு நாட்டில் டெங்கு தொற்றுநோயின் உச்சத்தில் ஆண்டுதோறும் 100,000 நோயாளர்கள்; பதிவாகியதில் இருந்து இந்த அபாயம் வெகு தொலைவில் இருந்தாலும், கொரோனாவின் கூடுதல் பாதிப்புக் காரணமாக, இது மக்களால் பெரிதாகக் கணக்கிடப்படாத ஒன்றாக இன்று உள்ளது வருந்தத்தக்கது.

உண்மையில், இந்த இரண்டு நோய்களின்சில அறிகுறிகளிலும்உள்ளபொதுவான தன்மைகள், ஆரம்ப கட்டங்களில் அவற்றுக்கிடையே வேறுபடுத்திப் பார்ப்பது மிகவும் கடினம்தான். இது எந்தநோய் எனப்பிரித்து அடையாளங்காண்பதில் மேலும் சிக்கலாக இருக்கின்றது.

இந்த டெங்கு நோயானத, நாடு முழுவதும் பெய்து வரும் அடை மழை காரணமாகவும் மற்றும் படிப்படியாக நாடு மீண்டும் திறக்கப்படுவதால், மக்கள் நடமாட்டம் அதிகரித்து அதனால் கோவிட்-19 தொற்றுநோய் அதிகமாகும் அதேவேளை டெங்கு நோயின் அதிகரிப்பு உண்மையான அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது.

இந்த நிலை சுகாதார சேவையாளர்களுக்கும் அதனோடு தொடர்புடைய சேவையாளர்களுக்கும் அதிக சுமைக்கு வழிவகுக்கும்.

ஆகவே, டெங்கு தடுப்பு நடவடிக்கைகளில் அரசும் பொதுமக்களும் இன்னும் கூடுதலான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தேவை முன்னெப்போதையும் விட இப்போது அதிகமாக உள்ளது என்பதே நிதர்சனம்.

நமது பக்கத்தில் உள்ள நாட்டினைப் நேரடியாகப் பாதிக்கும் தொற்றுப் பிரச்சினையை நாம் ஏற்கனவே பார்த்த பல அனுபவங்கள் எமக்குண்டு. அந்தவகையில்; இந்திய மாநிலமான ஒடிசாவில், கோவிட் தொற்றாளர்கள்; குறைந்திருந்தாலும், டெங்கு நோயின் தாக்கம் அண்மையில் அங்கு 15 மடங்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட தொற்றாளர்களின்; எண்ணிக்கை அங்கு சமீபத்திய ஆண்டுகளில் ஏற்பட்ட தாக்கத்தில் இரண்டாவது அதிகபட்சமாக உள்ளது.

இலங்கையில் கடந்த ஆண்டுகளில், மக்கள் விழிப்புணர்வு அதிகரித்த போதிலும், டெங்கு ஒரு தீவிரமான மற்றும் சில சமயங்களில் ஆபத்தான நகர்ப்புற சுகாதாரப் பிரச்சினையாக இருந்து வருகிறது. அதனால் இதுவரை அவற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பெரும்பாலும் பயனற்றவை என்பதை நிரூபிக்கின்றன.

அடுத்தடுத்து பல அனர்த்தங்களால் விரக்தியடைந்த அரசாங்கம், இராணுவம் உட்பட, ரோந்துப் பணிகளில் ஈடுபட்டு மக்களைப் பயமுறுத்துவது போன்ற பல முன்முயற்சிகளை கொவிட் நோயின் மீது இருந்துவிடுபட எடுத்துவந்த போதிலும்இவைஅனைத்தும்ஒருஇடைநிறுத்தல்நடவடிக்கைகளாகவேநோக்கப்படுகின்றன.

மக்கள் அவர்களாகவே உணர்ந்து அவர்களின் இயற்கையான மீண்டு வருதலையே இவ்வாறான நோய்த்தொற்றுக்களின்போது முன்னெடுக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த இரண்டு வருடங்களாகப் கொவிட்டை கட்டுப்படுத்த பெரிய அளவிலான நாட்டை முடக்குதல் நடவடிக்கைகள் வருடாந்த டெங்கு எண்ணிக்கையைக் குறைத்தாலும், பிரச்சனையின் அச்சுறுத்தல் இப்போது மீண்டும் வெளிவருவது மிகவும் ஆபத்தான ஒன்றாகும் .

குறிப்பாக நாடு திறக்கப்பட்ட நிலையில் எல்லா மாணவர்களும் இப்போது மீண்டும் பாடசாலைக்கு செல்லுவதும் இன்றளவில் கூர்ந்து கவனம் செலுத்த வேண்டிய ஒரு விடயமாகும்.

இன்று பலர் பொதுவாக, கோவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளோமோ என்ற அச்சம் காரணமாக, அதற்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கும் போது, மருத்துவமனைகளுக்குச் செல்வது குறித்து பொதுமக்களுக்கு நியாயமான கவலைகள் இருக்கும் விடயமும் உள்ளது.

எவ்வாறாயினும், அரசாங்க வல்லுநர்கள் அந்த அச்சத்தைப் போக்க பலவகையிலும் முயன்றுவருகின்றனர். இன்று அறிகுறிகள் தென்படும்போது அதனை மக்கள் டெங்குவா? அல்லது கோவிட் காய்ச்சலா? என்பதை அடையாளம் காண, ஆன்டிஜென் அல்லது முழு இரத்த பரிசோதனை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இன்று இந்தச் சூழலில் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் இல்லாத சூழலை எவ்வாறு பராமரிப்பது என்பது குறித்த வழிகாட்டுதல்களுடன், தங்கள் வீடுகளிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் டெங்கு பரவும் இடங்கள் குறித்துபொதுமக்களுக்குவிழிப்புணர்வு ஏற்படுத்த அரசு முன்வருவது பாராட்டத்தக்கது.

இதற்கிடையில், தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு விசேட டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

சுகாதாரசேவை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் முப்படையினர் மற்றும் தன்னார்வ தொண்டர்கள் ஆகியோர் நுளம்பு பெருகும் இடங்களைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்க நல்ல விடயம்.

இம்முயற்சி ஒரு தொடக்கமாக இருந்தாலும், சீரற்ற காலநிலையின் வடிவில் தடைகளை பல வந்த வண்ணமுள்ளது.

இதற்கிடையில், கோவிட் எண்ணிக்கை வெளித்தோற்றத்தில் கட்டுப்பாட்டில் இருப்பதனால் அரசாங்கமும் ஊடகங்களும் அதில் கவனம் செலுத்துவதனைக் குறைத்து வருகின்றது.

ஆனால் இன்னும் நாம் எமது மக்களை வழிப்பு நிலையில் வைத்திருந்தால் மாத்திரம் இன்னுமொரு அலையில் இருந்து நம்மை காப்பாற்றிக் கொள்ளலாம்.

அத்துடன் இன்னொரு டெங்கு ஆபத்தையும் நாம் நமக்குள் அண்டவிடாமல் பாதுகாக்க அனைத்து பகுதியினரும் ஒன்றுபடவேண்டும்! ஆகவே, நாம் பாதுகாப்பாகவும் விழிப்போடும் இருப்பது மாத்திரமே நம்மை மீட்டெடுக்க உதவும்.

எஸ். தணிகசீலன்



திருகோணமலை மண்ணின் மூதூர் கிராமத்தில் கூலித்தொழிலாளியின் கடைசி பிள்ளையாக பிறந்தவர்தான் இலக்சாயினி. தனது ஆரம்பக் கல்வியை மூதூரிலும் 2006 இல் யுத்த சூழலால் இடம் பெயர்ந்ததால் உயர் கல்வியை திருகோணமலையிலும் கற்றவர்.

இவருக்கு சிறு வயது முதலே கலை சார்ந்த விடயங்களில் ஆர்வம் இருந்தது ஆனாலும் அதனை வெளிப்படுத்துவதற்கான களங்கள் குறைவாகவே கிடைத்தது. பாடசாலை காலங்களில் ஏதாவது தன் எழுத்துக்களை ஆசிரியரிடம் காட்டும் போதெல்லாம் ‘இதெல்லாம் எழுத்தா முதல்ல வடிவா எழுத பழகு’ எனக்கூறி அந்த படைப்புகள் தூக்கி வீசப்படுவதே வழக்கமானது. அதுவே அவரது

# நிராகரிப்புக்களால்தான் சாதனை பிறக்கும்

மனதில் எழுத்து துறையில் என் பெயர் இருக்க வேண்டும் என்ற கனவை விதைக்க காரணமானது.

குடும்ப சூழலால் விடுதியில் தங்கி இருந்த போதெல்லாம் இவருக்கு பெருந்துணையாக இருந்தது தனிமையும் இயற்கையும் மட்டுமே.

எனவேதான் இயற்கையோடு கழிந்த பொழுதுகளில் உள்ளத்தில் எழுந்த சிந்தனைகள் எழுத்துக்களாய் உருப்பெற்றன. 2014ம் ஆண்டு மாவட்ட மட்ட பேச்சு போட்டியில் முதலாம் இடத்தையும் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ள அதே வேளை 2017ம் ஆண்டில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விருது வழங்கல் பேச்சு போட்டியில் மாவட்ட

## இலக்சாயினி



மட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றவர்.

பல சஞ்சிகைகளில் தனது சமூக அக்கறை மிக்க ஆக்கங்களை வழங்கி வந்த இவர் கத்தோலிக்க இளைஞர்கள் மன்றத்தால் வெளியீடு செய்யப்பட்ட திருமலை தீபம் பகுதியிலும் பல கவிதைகளை எழுதியுள்ளார்.

இதைவிட பல இணைய வழி போட்டிகளிலும் பங்கு பற்றி பல சாதனைகளை பெற்றுள்ளதோடு தன் கன்னி நூலை விரைவில் வெளியீடு செய்வதற்காக தான் இதுவரை எழுதிய கவிதைகளை தொகுத்துக் கொண்டிருக்கிறார்.

பின்புலங்கள் இன்றி தனித்துவமான தன் படைப்புக்களால் எழுத்து துறையில் சாதிக்க வேண்டும் என்ற கனவுகளோடும் தன்னம்பிக்கையோடும் துடிப்பான இளம் பெண்ணாக வலம் வரும் இலக்சாயினி சமூகப் பணிகளிலும் விளையாட்டு முதலிய பல்வேறு துறைகளிலும் முன்னின்று வழிகாட்டிக் கூடிய ஒரு சிறந்த ஆளுமையாக தன்னை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் தினம் தினம் கற்றுக் கொண்டிருக்கிறார். இவரது கலைக் கனவுகள் நனவாக எமது நல்வாழ்த்துகள்.








இளம் கலைஞர் அறிமுகம்
கு.கிலசன்



# எழுத்தாளராகும் கனவோடு கால் பதிக்கும் பாத்திமா சனா

இயற்கை எழில் கொஞ்சும் திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பிரதேசத்தில் சித்தி பஸீரா முகம்மது ஆஸாத் தம்பதியர்களுக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தவர்தான் பாத்திமா சனா ஆஸாத். தனது ஆரம்பக்கல்வியை கிண்ணியா அந் நஜாத் வித்தியாலத்திலும் தரம் 6 தொடக்கம் சாதாரண தரம் வரை குறிஞ்சாக்கேணி மகளிர் வித்தியாலத்திலும் கல்வி பயின்றார்.

சிறிய வயதிலிருந்தே அதிகமாக புத்தகம் வாசிக்கும் பழக்கமுள்ளவர் பாடசாலை நாட்களில் அதிகமாக ஆங்கில போட்டி, தமிழ் இலக்கண போட்டி, மீலாத் நபி போட்டி போன்ற பல போட்டிகளில் கலந்து கொண்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு அரபு கல்லூரியில் இணைந்தவர் அங்கு புத்தகம் வாசிப்பதிலும் எழுதுவதிலும் அதிக நேரத்தை செலவிட்டார். தேடல் அதிகரிக்க அதிகரிக்க பரந்துபட்ட சிந்தனையில் தன் எழுத்து வடிவங்களை உருவாக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டி வருகிறார். தன் படைப்புகளை பெரும்பாலும் ஆங்கில மொழியிலேயே எழுதி வரும் இவருக்கு தமிழின் மீதும் நாட்டமுண்டு.

தண்ணீர் இல்லாததால்தான் மண்ணில் விரிசல் ஏற்படுகிறது.

அதே போல் தான் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் பலமுறை தவித்திருக்கிறார்.

எனவே அதிகமாக எழுத்துத் துறையை நேசிக்கும் ஒரு இளம் படைப்பாளியாக தன்னை வளப்படுத்தி வரும் இவர், யார் எதைச் சொன்னாலும் தன் முயற்சியை கைவிடுவதில்லை என்பதில் தன்னம்பிக்கையோடு உள்ளார்.

எழுத்து துறையில் ஆர்வம் கொண்டவராக இருந்தவர் மார்க்கத்திலும் பற்றுடன் திருமறையான அல்குர்ஆனை மனனம் செய்தார். தன்னை போல பிறரும் குர்ஆனை மனனம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பிள்ளைகளுக்கு இணையவழி வகுப்புக்களை நடத்தினார்.

அவ்வாறிருக்கயில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா பேரிடரால் வீட்டில் முடங்கி தொலைபேசியில் அதிகமாக நேரத்தை கழிப்பதால் இணையவழி மூலம் கட்டுரை, கவிதை என பல போட்டிகளில் கலந்து கொண்டு பல சான்றிதழ்களையும் பெற்றார்.

இவ் வெற்றிகள் உத்வேகத்தை கொடுக்கவே எழுத்து துறையில் ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற கனவை மனதில் விதைத்து கொண்டார்.

தன்னால் முடிந்த வரை முயற்சி செய்யும் இவர் பல தோல்விகளையும் சோதனைகளையும் சந்திக்க தவறவுமில்லை ஆனாலும் முயற்சியில் பின் வாங்காது வாழ்க்கை பயணத்தில் ஓடிக்கொண்டே இருக்கிறார்.

இவரது தவிப்புக்கள் தீர்ந்து நல்ல கலைஞராக எழுத்துலகில் மிளிர எமது வாழ்த்துகள்.



# கவிச்சக்கரவர்த்தி கம்பர்

''கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்'' என்றொரு பழமொழியே உருவாகும் அளவிற்கு, கம்பரது புகழும், கவித் திறமையும் அனைவராலும் இன்றளவும் பேசப்பட்டு வருகிறது. 'கவிபேரரசர் கம்பர்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்', 'கல்வியில் பெரியவர் கம்பர்' என்றெல்லாம் அவரது கவித்திறனைப் பறை சாற்றும் அளவிற்கு அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வன்மைக் கொண்டவராக இருந்த அவர், ஆழமான கவிதை அனுப வமும், கற்பனை ஆற்றலும், புலமைத் திறனும் பெற்று, அவரது சமகாலத்துப் புலவர்களான ஒட்டக்கூத்தர், சேக்கிழார் போன்றோரின் நன்மதிப்பையும் பெற்றிருந்தார்.

'கம்பராமாயணம்', 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும்.

இதில், 'கம்பராமாயணம்', தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்த காவியமாகக் கருதப்படுகிறது. மேலும், கம்பரின் தனித்துவமான சுவைக்கினிய பாணியில் அதைப் படைத்ததால், அது உலகளாவிய அங்கீகாரம் பெற்றது எனலாம். ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர், அறிஞர், கவிஞர், நாடக ஆசிரியர் என்று பன்முகம் கொண்டு விளங்கியவர்.

கம்பர் அவர்கள், கிபி 12 ஆம் நூற்றாண்டில், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூர் என்னும் இடத்தில் ஆதித்தன் என்பவருக்கு மகனாக ஒச்சன் என்ற உட்பிரிவில் பிறந்தார். அவரது பெற்றோர்கள், கடவுள் நரசிம்மரின் தீவிர பக்தர்கள் என்பதால், அவருக்கு 'கம்பர்' என்று பெயர் சூட்டினர். 'கம்பா' என்றால் 'தூண்' என்று பொருள். 'பக்தப் ப்ரகலாதனைக் காக்க, நரசிம்மர், தூணைப் பிளந்து கொண்டு வந்தார்' என்ற பக்திக் கூற்றைக் கொண்டு, அவருக்கு அப்பெயர் சூட்டினர் அவரது பெற்றோர்.

நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந் தாலும், அவர் தமிழ்நாட்டில் உள்ள வெண்ணைநெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ, செழிப்போடு எடுத்து வளர்க்கப்பட்டார்.

இளம் வயதிலிருந்தே அவர், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியின் மீது பேரார்வம் உடையவராக இருந்ததால், அவரது நலம் விரும்பியான வள்ளல் சடையப்ப முதலியார் என்பவரின் உதவியுடன் அவ்விருமொழிகளை மிகுந்த ஆர்வத்துடன் கற்றுத் தேர்ந்தார்.

சிறு வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது. அம்மொழிகளின் அடிப்படையை பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர், பல கவிதைகளும், நூல்களும் எழுதத் தொடங்கினார். அதன் பின்னர், அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது.

மாபெரும் கவிஞராக உருவெடுத்த கம்பரின் புகழை அறிந்த அப்போதைய சோழ மன்னர், அவருக்கு அழைப்பு விடுத்தார். அரண்மனைக்கு சென்ற அவர், மன்னரின் அன்பு கட்டளைக்கிணங்க அவரது படைப்புகளில் சில வரிகளை அவருக்குப் பாடிக் காட்டினார். அவரது கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், அவருக்கு, கவிஞர்களின் பேரரசர்' என்னும் அர்த்தமுடைய 'கவி சக்கரவர்த்தி' என்னும் பட்டம் சூட்டி, அவருக்கு சொந்தமான பெருவாரிய நிலத்தைப் பரிசளித்து, அதற்கு 'கம்பநாடு' என்றும் பெயர் சூட்டினார்.

கம்பரின் தாய்மொழி, தமிழ் என்றாலும், சமஸ்கிருதத்திலும் அவர் புலமைப் பெற்றே விளங்கினார். அதற்கு சான்று, அவர் எழுதிய 'கம்பராமாயணம்'. முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த ராமாயணத்தை, அவர் தமிழில், அவருக்குரித்தான பாணியில் மீண்டும் எழுதினார்.

கலம்பகம்

க.மங்களேஸ்வரி

அவரது பாடல் வரிக ளின் அழகு, அற்புதமான நயம், உவமானம் மற்றும் பல வகையான வியக்கத் தகு கவிதை நடைகள் அவரது பாரம்பரிய கவிதைகளில் இடம் பெற்றிருக்கும்.

தமிழ்மொழியின் பெருமையை, இடைக்கால காலகட்டங்களில் அற்புதமாக வெளிக்காட்டி யதால், அவர் 'கம்ப நாட்டாழ்வார்' என்றும் அழைக்கப்பட்டார். அவர், கம்பராமாயணம் தவிர, 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்ற அற்புதப் படைப்புகளைப் படைத்துள்ளார்.

கம்பராமாயணம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பட்ட இடத்தைப் பிடித்து, தமிழ் இலக்கியத்தையே வானளவிற்கு உயர்த்தியது என்று சொன்னால் அது மிகையாகாது. கவிதை வடிவங்களில் ஆளுமைப் பெற்றவராக இருந்த அவர், வார்த்தைகளில் பலவிதமான அற்புதங் களை நிகழ்த்துபவர் என்பது அக்காவியத்தில் பல இடங்களில் தெளிவாகத் தெரியும்.

உருவகமும், உவமானமும் நிறைந்த கம்பராமாயணம், பின்னாளில் வரும் கவிஞர் களுக்கு ஒரு குறிப்புதவி நூலாக அமைந்தது.

வால்மீகி எழுதிய இராமாயணத் தில் 24,000 ஈரடிகள் இருக்கும், ஆனால், கம்பராமாயணத்தில் 11,000 சந்தங்கள் இருக்கும். தமிழர்களின் கலாச்சார உணர்திறனுக் கேற்ப அவர், வால்மீகியின் ராமாயணத் தில் பல இடங்களை மாற்றி அமைத்துள் ளார்.

**அவற்றுள் சில:**

சீதையைக் கண்ட ஆஞ்சநேயர், அதை ராமனிடம் தெரிவிக்கும்போது, ''கண்டனன் கற்பினுக் கணியை கண்களால்...'' என்ற அற்புத வார்த்தைகள் இன்றளவும் தமிழ் இலக்கியத்தில் மறக்கமுடியாத அடிகளாக இருந்து வருகிறது.


இராவணன், சீதையைக் கடத்திக் கொண்டு போகும் போது, ''அவள் கற்பிற்கே இலக்கணமாக இருந்தாள் என்பதற்காக, அவள் இருந்த குடிசை யோடு சிறிதளவு நிலத்துடன் பெயர்த் தெடுத்து அவளைக் கடத்திக்கொண்டு போனான்'' என்றும் அற்புதமாக விளக்கியிருப்பார்.

போரில், ராமன் தொடுத்த ஒரு அம்பு, அவனது உடல் முழுவதும் துளைகளை ஏற்படுத்தியது. இதைக் கம்பர், ''ராவணன் சீதை மீது கொண்ட அழிவுநோக்கிய காதல், அவனது உடலில் எங்குள்ளது என்பதை அறியும் சல்லடையாக இருந்தது அந்த அம்பு'' என்று யாராலும் யூகிக்க முடியாத அளவிற்கு அற்புதமாக விளக்கியிருப்பார்.

கவிச்சக்ரவர்த்தி கம்பர், கி.பி. 1250 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.

**சிவனேஸ்வரன் தாரணி**


## நூல் அறிமுகம்




பேராசிரியர் மௌனகுரு அவர்களால் படைக்கப்பட்ட ''கூத்த யாத்திரை (நான் கொண்டதும் கொடுத்ததும்)'' எனும் நூல், அவர் கூத்துக்கலைக்கு அறிமுகமான பின்னணி தொடக்கம் தற்போது வரை கூத்தினூ டாக தான் பெற்ற அனுபவங்களையும், தன்னுடைய வாழ்வில் தான் கண்ட கூத்துக் கலைஞர்களையும், அண் ணாவிமார்களையும் அவர்களிடம் பெற்றுக் கொண்ட கூத்தறிவுகளையும், பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் மூலமாக கூத்தின் மூல வேர்கள் வரை பல்வேறு விதத்தில் ஆராயத் தொடங்கியமை, பழகியமை பற்றியும் அதனூடாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் பற்றியும் கட்டுரைகளாக படிப்போருக்குத் தெளிவுரும் விதத்தில் படைக்கப்பட்டுள்ளது.

அக்காலத்தில் வீதிகளில் தெருக்கூத்தாக ஆடிவந்த கூத்துக்கலை படிப்படியாக மறைந்து போனமை யாமறிந் ததே. அத்தகைய தமிழர்களின் கூத்துக்கலையினை மீளுருவாக்கம் செய்து ஈழம் முதல் வெளிநாடுகள் வரை யிலும் எடுத்துச் சென்று மாணவர்கள் வாயிலாக உலகறி யச் செய்யும் வகையில் நகர்த்திக் கொண்டிருக்கும் பெருமை பேரா. மௌனகுரு அவர்களையே சாரும்.

''நான் சவமாகும் வரை கூத்து எனக்குள் இயங்கிக் கொண்டேயிருக்கும். நான் சவமான பின்னரும் இந்த இயக்கம் என் மாணவர்கள் மூலம் தொடர்வார் என எதிர்பார்க்கிறேன்'' என்ற இவருடைய வரிகளே, இவரது இறுதி இலக்காகவுள்ளது.




'கிழக்கின் 100 சிறுகதைகள்'

கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மற்றொரு முயற்சியின் பெருமைக்குரிய பெறுபேறாக 'கிழக்கின் 100 சிறுகதைகள்' நூல் இன்று 20. 11. 2021, சனிக்கிழமை திருகோணமலையில் வெளியாகின்றது.

இன்றிருந்தால், நூறு வயதைத் தொட்டி ருக்கக் கூடிய படைப்பாளிகள் தொடக்கம் முப்பத்துமூன்று வயது இளைஞர் வரை யான கிழக்கு மாகாணத்தின் (இலங்கை) முக்கிய படைப்பாளிகள் இந்தத் தொகுப் பில் உள்ளனர்.


பக்கங்கள்: 810

அட்டை வடிவமைப்பு: எம். நஷ்மி.

நூல் வடிவமைப்பு: ரி. ஷங்கர் (வணசிங்ஹ அச்சகம்)

அச்சாக்கம்: வணசிங்ஹ அச்சகம், மட்டக்களப்பு

# கவிஞர் பாண்டியூரனின் மொழி கையாள்கை வியக்க வைக்கிறது!



## பாண்டியூரனின் கவிதை நூல் வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் உமாவரதராஜன்



– செல்லையா பேரின்பராஜா

1980களின் பின் பிறந்த பலருக்கும் கவிஞர் பாண்டியூரனின் பெயரும் அவருடைய கவிதைகளும் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் பாண்டியூரனின் மரபுக்கவிதைப் பாணி இன்று அருகிப் போன ஒரு வடிவம் ஆகி விட்டது. எங்களைப் போன்றோர் எழுத வந்த எழுபதுகளின் மத்தியில் தமிழ்க் கவிதை என்பது வேறு திசை நோக்கி நகரத் தொடங்கி விட்டது. 1970 களின் பின்னர் தமிழ்க் கவிதை சொல்லப்படும் முறையில் மாற்றங்கள் நிகழ்ந்தன. தளைகளைக் களைந்த அல்லது இறுக்கங்கள் தவிர்த்த வசன கவிதைகளும் பேச்சோசைக் கவிதைகளும் செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்தன.

**புதுக்கவிதை வெறுப்பாளர் வகைக்குள் கவிஞர் பாண்டியூரனை அடக்க முடியும்**

பாண்டியூரனும் பாண்டியூரன் போன்ற இன்னும் சிலரும் மரபுக் கவிதைப் பாணியைக் கை விடத் தயாராகாதவர்களாக இருந்த போதிலும், வாழ்வியல் அம்சங்களையும், நவீனத்துவ வாழ்க்கையின் நெருக்கடிகளையும், அரசியல் சூழலையும் பேச முற்பட்டதால் நம் கவனத்துக்கு உரியவர்கள் ஆகினார்கள்.




மரபுக் கவிதைகளா? புதுக் கவிதைகளா? உயர்ந்தவை என்ற வாதப்பிரதி வாதங்கள் ஒரு காலத்தில் மிகவும் உக்கிரத்துடன் பேசப்பட்டன. கற்பில் சிறந்தவள் கண்ணகியா?, சீதையா? போன்ற வகையறாவைச் சேர்ந்த இந்த சர்ச்சை அநேகமாக இன்று தேய்ந்து போன ஒன்றாக ஓய்ந்து விட்டது. 'பழையன கழிதல்–புதியன புகுதல்' என்ற உலக வரலாற்று உண்மைக்கு இணங்க, தமிழில் வசனக் கவிதை அல்லது புதுக் கவிதை என்ற வடிவம் தவிர்க்க முடியாத ஓர் இடத்தை இன்று பெற்று விட்டது.

தமிழ்க் கவிதைத் துறையில் நிகழ்ந்த இத்தகையதொரு மாற்றத்தை ஏற்றுக் கொண்ட கவிஞராகப் பாண்டியூரனைக் கொள்ள முடியாது. புதுக் கவிதை வெறுப்பாளர் என்ற வகைக்குள்ளேயே அவரை நாம் அடக்க வேண்டியிருக்கும்.

இன்றைக்கு வெளியாகும் பாண்டியூரனின் கவிதைகள் நூலை இப்போதைய இளைய தலைமுறைப் படைப்பாளிகளும், வாசகர்களும் எவ்விதம் எதிர்கொள்வார்கள் என்பது ஒரு முக்கியமான கேள்வி. இன்றைய மாறிப்போன இரசனையின் அடிப்படையில், இந்தக் கவிதைகள் அருங்காட்சியகத்தின் பொருட்களாக அல்லது குறிப்பிட்டதொரு காலத்தின் ஆவணமாக அவர்களுக்குத் தென்படக் கூடும்.

சுருக்கமாகச் சொன்னால், இந்தத் தொகுப்பு காலம் தப்பிப் பெய்யும் மழை, அல்லது காலம் பிந்தி விளைந்த பயிர். ஆனாலும், எப்போது பெய்தாலும் மழையை வெறுப்பவர் உண்டோ? எப்போது விளைந்தாலும் பயிரின் பச்சையை விரும்பாதோர் உண்டோ?

அப்படியேதான், பாண்டியூரனும் இன்றைக்குத் தோன்றுகிறார்.

ஒரு நிதானமான வாசகனாக அவரை அணுகுகையில், மரபென்ற பெயரால் அவருக்குப் போர்த்தப்பட்டிருக்கும் தடித்த திரைகள் அகல்வதைக் காணலாம். மரபுக் கவிதையென்றால் மிகவும் வலிந்து சொற்களை இழுத்து வந்து, மொழியின் கழுத்தைத் திருகி, கருகலானதோர் சொற்கூட்டத்தை சட்டகமொன்றுக்குள் அடைப்பது என்ற எண்ணத்தைப் பாண்டியூரனின் மொழி லாவகம் தகர்த்தெறிகின்றது. மொழியைக் கையாள்வதில் அவருக்குள்ள தேர்ச்சி வியக்க வைக்கின்றது. அவருடைய சொல்லாட்சி, கற்பனை வளம், வாழ்க்கை பற்றிய நோக்கு, சமகாலம் குறித்த பிரதிபலிப்பு, அநீதி குறித்த தார்மீக ஆவேசம் என்பன பாண்டியூரனின் கவிதைகளுக்கு இன்றைக்கும் மரியாதை செய்யத் தூண்டுகின்றன.

இவையெல்லாம், காலம் கடந்த கவிதைகள் என ஒரு விரல் சொடுக்கில், உதட்டு நெளிப்பில் கடந்து சென்று விடுவது பெரிய காரியமல்ல. ஆனால், எல்லா இலக்கியப் படைப்புகளையும் காலம் கடந்துதான் செல்லப் போகின்றது. ஆயினும், கால வெள்ளத்துடன் எதிர்நீச்சல் போடும் படைப்புகளே நம் கவனத்துக்குரியதாகின்றன.

அந்த வகையில், பாண்டியூரன் ஒரு முக்கியமான படைப்பாளியாகவே இவ்வளவு வருடங்கள் கழிந்தும் புலப்படுகின்றார். மரபுக் கவிதையை சிறப்பாகக் கையாண்ட இந்தப் பிரதேசத்தின் முக்கிய கவிஞர்களில் பாண்டியூரனும் ஒருவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. முற்றத்தில் கொட்டும் பூச்சொரியல் போல, வார்த்தைகள் அவருக்கு சர்வ சாதாரணமாக வந்து விழுவதைப் பார்க்கின்றோம்.

**மரபுக் கவிதையை சிறப்பாகக் கையாண்டவர் கவிஞர் பாண்டியூரன்**



1990 இல் அவர் மறைந்தார். பலருக்கும் தெரியும். காலத்துக்கு முந்திய மரணம் அது. அவர் தன் வாழ்நாளில் கவிதைத் தொகுப்பைப் பார்த்திருக்க வேண்டியவர். உன்னதமான படைப்பாளிகள் பலருக்கும் நிகழ்ந்தது போலவே தன் வாழ்நாளில் அது அவருக்கு சாத்தியமாகவில்லை.

அவர் மறைந்து சுமார் 30 ஆண்டுகளுக்குப் பின்னர், கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு. ச. நவநீதன், திரு. சிவவரதராஜன் மற்றும் பலரினதும் கூட்டு முயற்சியால் இந்தத் தொகுப்பு இன்று வெளியாகின்றது.

## மாகாணப் பணிப்பாளர் நவநீதனுக்கு பாராட்டு



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராக சரவணமுத்து நவநீதன் பதவியேற்ற பின்னர் இத்திணைக் களத்தின் செயற்பாடுகள் வீறு நடை போடுகின்றன.

புகழ்பூத்த கல்விமான், இலக்கிய வித்தகர் சாமித்தம்பி சரவணமுத்துவின் புதல்வரான இவர், தனது தந்தையைப் போன்று கலை இலக்கிய செயற்பாடுகளில் அதீத ஈடுபாடு காட்டி வருபவர்.

இவரது தந்தையார், சிறந்த தமிழாசிரியர். புகழ்பூத்த அதிபர். தமிழர்களின் பாரம்பரிய கலைகளான கூத்து, கும்மி, கோலாட்டம் என்பவற்றுக்கு புத்துயிரளித்தவர்.

கலை இலக்கிய துறையில் அதிக ஆர்வம் உள்ள பணிப்பாளர் நவநீதன், கவிதை, சிறுகதை, மேடை நாடகம், தெரு நாடகம் போன்றவற்றில் கால்பதித்தவர்.

இவர் இயல்பாகவே சிறந்த பாடகர். தொட்ட பணிகளை, துலங்க வைக்கும் பணிப்பாளர் நவநீதன், இன, மத, பிரதேச வேறுபாடுகளை கடந்து, தமது படைப்புக்களை நூலுருவாக்கம் செய்ய முடியாதிருந்த பல படைப்பாளிகளின் நூல்களை, தேடிக்கண்டறிந்து அவற்றை அழகுற அச்சிட்டு வாசகர்களுக்கு கொடுத்தவர். தொடர்ந்தும் அவர் அதே பணியில் உற்சாகத்துடன் செயல்படுகிறார்.

காலத்தின் தேவையறிந்து, குறும்படம் தயாரித்தல், கவிதை புனைதல், சிறுகதை எழுதுதல் உள்ளிட்ட பல பயிலரங்குகளை திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிறப்பு வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு நடாத்தியுள்ளார்.

இதற்கும் ஒரு படி மேலே சென்று, கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுகதை எழுத்தாளர்களின் சிறுகதைகளை தேடிக்கண்டு பிடித்து, நூறு எழுத்தாளர்களின் நூறு கதைகளை நூலுருவாக்கம் செய்து, இன்று 20.11.2021 திருகோணமலையில் வெளியீட்டு வைக்கின்றார். இது ஓர் இமாலய சாதனை.

**இவருடைய பணி மேலும் சிறக்க கல்முனை நெற் மனதார வாழ்த்துகிறது.**

# சிறப்பாக இடம்பெற்ற பாண்டியூரன் கவிதை நூல் வெளியீட்டு விழா!

கவிஞர் பாண்யூரன் மாஸ்டரின் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு 14. 11. 2021 ஞாயிற்றுக்கிழமை மாலை பாண்டிருப்பு மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இலக்கியவியலாளர்களின் நூல்கள் வெளியிடப்பட்டு வரும் வரிசையில் கவிஞர் பாண்டியூரன் கவிதை நூல் வடிவம் பெற்று வெளியிடப்பட்டது.

கல்முனைஉவெஸ்லிஉயர்தரப்பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் மறுமலர்ச்சி சனசமூக நிலைய ஆலோசகரும் எழுத்தாளருமான தமிழ்மணி உமா வரதராஜன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் நூலை வெளியீடு செய்து சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினர்களாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், கல்முனை வடக்க பிரதேச செயலாளர் ரி. ஜே. அதிசயராஜ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக் கழக முன்னாள் தமிழ் துறை தலைவர், பேராசிரியர் றமீஸ் ஏ. அப்துல்லா, ஆலோசகர், மறுமலர்ச்சி சனசமூக நிலையம் டாக்டர் திருமதி. புஸ்பலதா லோகநாதன், ஆலோசகர், மறுமலர்ச்சி சனசமூக நிலையம் திரு. சபா சபேஷன், பிரதிப் பதிப்பாளர் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் திரு. சஞ்சீவி சிவகுமார், உபதலைவர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் திரு. பா. செ. புவிராஜா, செயலாளர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் திரு. சி. புனிதன், உபசெயலாளர் மறுமலர்ச்சி சனசமூக நிலையம் திரு. சிவவரதராஜன், கவிஞரின் குடும்ப உறுப்பினர் செல்வி நடேசன் கௌசிகா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கவிஞர் பாண்டியூரன் மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாண்டியூரனின் கவிதை நூல் உருவாக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு செய்த தமிழ் மணி உமாவரதராஜன், சிவவரதராஜன் ஆகியோருக்கு பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் நவநீதன் விஷேட நன்றிகளை தெரிவித்ததார்.

ஊடகவியலாளரும் அதிபருமான செல்லையா பேரின்பராஜா இந் நிகழ்ச்சியை அழகுற தொகுத்து வழங்கினார்.

நிகழ்வை கல்முனை நெற் நேரலையாக ஒளிபரப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. இவ் விழாவானது சுகாதார வழிமுறைகளுக்கு அமைய இடம்பெற்றது.





















































# தலைநகர் புதுடில்லி மாசடைவு; பாடசாலைகள் திடீர் பூட்டு

## தொழிற்சாலைகளுக்கு எச்சரிக்கை

இந்திய தலைநகர் புதுடில்லியிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் இம்மாதம் 21 வரை மூடப்பட்டுள்ளன. வளிமண்டலம் மாசடைந்ததைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது. உலகில் அதிக சனத்தொகையுள்ள முப்பது நகரங்களில் புதுடில்லியும் ஒன்று. இங்கு இருபது மில்லியன் மக்கள் வாழ்கின்றனர்.

வாகனங்களின் புகை, நிலக்கரி ஆலைகளின் செயற்பாடுகள், கட்டட நிர்மாணப்பணிகள் மற்றும் வயல் நிலங்களுக்கு தீ வைத்தல் போன்ற காரணங்களால், வளி மண்டலம் மாசடைந்துள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

இதனால், இப்பணிகளை அவசரமாக நிறுத்தும்படியும் புதுடில்லி மாநகர சபை அறிவித்துள்ளது. இதை, மீறிச் செயற்படுவோருக்கு நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல் செய்யப்படவுள்ளன.

இவ்வாறு, வளிமண்டலம் மாசடைந்த தால் புதுடில்லியில் பலர், சுவாச அழற்சி, இருமல் மற்றும் நுரையீரல் தாக்கம் போன்ற நோய்களுக்கு ஆளாகியுள்ளமை வைத்திய பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், 2019 இல் 17 500 பேர் இந்த உபாதைகளுக்காளாகி உயிரிழந்தனர்.

இந்நிலைமைகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டே அவசர முன்னேற்பாடுகளாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. புதுடில்லியிலுள்ள சகலரும் வீடுகளுக்கு முன்னால் நீர் தெளித்து சூழலை குளிர்ச்சியாக வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அவசியமில்லாமல் எவரும் புதுடில்லிக்கு வருவதும் தடுக்கப்பட்டுள்ளது.

மேலும், புதுடில்லியை அண்மித்துள்ள நகரங்களும் இந்த விதிமுறைகளைக் கடைப்பிடிக் கும்படியும் கோரப்பட்டுள்ளது. அதிக கழிவுகளை வெளியிடும் நகரங்களுக்கு உதவும் சுவீடனைச் சேர்ந்த அமைப்பு புதுடில்லிக்கு நிதியுதவி வழங்கி கழிவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவவும் முன்வந்துள்ளது.

# காஸாவுக்கு எரிபொருள் வழங்க இணக்கம்

## ஒஸ்லோ மாநாட்டில் உடன்படிக்கை கைச்சாத்து



காஸாவுக்கு எரிபொருள் மற்றும் கட்டடப் பொருட்களை விநியோகிக்க எகிப்தும் கட்டாரும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஒஸ்லோவில் நடந்த காஸாவுக்கு உதவும் மாநாட்டில் இந்த நாடுகள் இதற்கான உடன்படிக் கையில் கடந்த செவ்வாய்க் கிழமை கைச்சாத்திட்டன. இவ்வருட மேமாதம் நடந்த இஸ்ரேல், காஸா 11 நாள் போர் 21இல் நிறுத்தப்பட்டது.

இதில், காஸாவில் 2200 வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன், 37,000 வீடுகள் பகுதியளவில் சேதமுற்றன. உயிரிழப்புக்கள் 253 ஆக அதிகரித்தது. இவற்றைப் புனரமைப்பதற்கு 479 மில்லியன் டொலர் தேவை என, இந்த ஒஸ்லோ மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சேதங்களை மீளக் கட்டி எழுப்ப 500 மில்லியன் டொலரையும், எரிபொருளையும் காஸாவுக்கு வழங்க, கட்டார் மற்றும் எகிப்து இணங்கியுள்ளன.



# 327 தமிழர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்கிய சுவிஸ்



சுவிட்ஸர்லாந்து அரசு, இலங்கை தமிழர்கள் 327 பேருக்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை பாதுகாப்பு பிரிவு, பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் பொலிஸாரினால் மரண அச்சுறுத்தல் மற்றும் சித்திரவதைகள் மேற்கொள்ளப்படுவதாக சுவிஸ் அரசாங்கத்திடம், குறித்த இலங்கையர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் தஞ்சம் பெற்ற நபர்கள் யார் என சுவிஸ் அரசாங்கம் இதுவரையில் தகவல் வெளியிடவில்லை. எனினும் 17 இலங்கையர்களுக்கு அரசியல் தஞ்சம் வழங்க சுவிஸ் அரசாங்கம் நிராகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

சூரிச் நகரத்தில் மொழி மாற்றம் செய்யும் ஒருவரால் இந்த நபர்களுக்கு அரசியல் தஞ்சம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நபரால் அதற்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதென குறித்த ஊடகம் தெரிவித்துள்ளது.

# சிதைந்த சோவியத் யூனியனை மீளிணைக்க ரஷ்யா முயற்சி

உக்ரைனின் எல்லைப்பகுதிகளில் படைகளை குவித்து வரும் ரஷ்யா, பிராந்தியத்தில் பதற்றத்தை ஏற்படுத் துவதாக 'நேட்டோ' தலைவர் குற்றம் சாட்டியுள்ளார். உடன் படைகளை விலக்கி அமைதிக்கு வழிவிட வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புரூசெல்ஸில், உக்ரைன் வெளிநாட்டமைச்சரைச் சந்தித்த பின்னரே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் வடபகுதியான கிரீமியாவை, 2014 இல் ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

அன்று முதல், இவ்வாறான இராணுவக் கெடுபிடிகளில் ஈடுபடும் ரஷ்யா, 1990 இல், சிதைந்துபோன சோவியத் யூனியனை மீளிணைக்க முற்படுகிறதா? என்ற சந்தேகம் எழுவதாகவும் 'நேட்டோ' தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர், நேட்டோவிலுள்ள ரஷ்ய சார்பு நாடுகள் சிலவற்றை நீக்குவதற்கு இந்த அமைப்பு தீர்மானித்த நிலையில்தான் இந்த சர்ச்சை மீண்டும் எழுந்துள்ளது.

இந்நிலையில், ரஷ்யாவின் பொறுப்பற்ற இச்செயற்பாடுகளை, ஐரோப்பிய யூனியன் கண்டுகொள்ளாதிருப்பதாக அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. 'நேட்டோ' தலைமையகம், ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றம் என்பன பெல்ஜியத் தலைநகர் புரூசெல்ஸில் உள்ளன.

# செக்குடியரசில் கொரோனா

## நாளொன்றில், 22479 பேருக்கு தொற்று

செக்குடியரசில் மீண்டும் கொரோனா தலையெடுத்துள்ளதாக, அந்நாட்டின் சுகாதரத்துறை அறிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாத தொற்றுடன் ஒப்பிடுகையில் 54% வீத அதிகரிப்பை காட்டுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்ட அண்டிஜன் பரிசோதனையில் 22479 தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, வைத்தியசாலைகள் யாவும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகளும் அங்கு துரிதப் படுத்தப்பட்டுள்ளன.

# அமெரிக்கத் தொழினுட்பங்கள் திருட்டு; சீனர்கள் மீது 'சைபர்' குற்றச்சாட்டு

விமான உற்பத்தியில் அமெரிக்காவின் தொழினுட்பங்களை திருடியதாக, சீனப் பிரஜைகள் பலரை அமெரிக்க நீதிமன்றம் குற்றஞ்சாட்டி உள்ளது.

போலிப் பெயர்களில் அறிமுகமான இவர்கள், அமெரிக்காவின் ஐந்து வருட விமான உற்பத்தி திட்டத்தில் உயரதிகாரிகளாக இணைந்து பணியாற்றி உள்ளனர்.

இவர்களில், உளவுத்துறை அதிகாரிகளாக அறிமுகமான இருவர், அமெரிக்காவின் அதி உயர் விமான உற்பத்தி நிறுவனங்களில் கடமையாற்றியிருக்கின்றனர்.

விமானத்தின் இன்ஜின், விசிறி உள்ளிட்ட பிரதான பாகங்களில் கையாளப்படும் தொழினுட்பங்களை கணனியிலும், இணைய வழிகளிலும் திருடி சீனாவுக்கு அனுப்பியதாக இவர்கள்மீது 2018 இல் சந்தேகம் வெளியிடப்பட்டது.

இந்தச் சந்தேகம் இப்போது நிருபிக்கப்பட்டுள்ளதால், சுமார் 15 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட உள்ளது.

இவ்வாறான 'சைபர்' குற்றங்களுக்கு அமெரிக்காவில் உச்சபட்ச தண்டனை வழங்கப்படுகின்றது.

